சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்



இலக்கிய மாத இதழ். 2 அண

சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

மலர் 2 இதழ் 4 | ஏப்ரல் 1956 | மன்மத பங்குனி

இதுவே வழி

ராஜ்யப் புனரமைப்பு மசோதா வெளியாகி யிருக்கின்றது. மொழிவழி மாகாணக் கோரிக்கையை நடைமுறையில் அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது.

புதிய ராஜ்யங்கள் அக்டோபர் முதல் தேதி உருவாகும்.

தமிழர்களுக்குத் தமிழ் மாகாணம் ஏற்படும். தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷை நிறைவேறுகிறது.

நியாயமாகச் சேரவேண்டிய சில பகுதிகள் நமக்குக் கிடைக்கவில்லை. இதில் நம் எல்லோருக்கும் வருத்தந்தான்.

எல்லைத் தகராறுகளைத் தீர்த்து வைக்க எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும் என்று மசோதா கூறுகிறது. நமக்குச் சேர வேண்டிய பகுதிகளைப்பற்றி கமிஷனிடம் விவாதித்துத் தீர்த்துக் கொள்ளலாம். அப்படி ஒன்றும் தீர்வுகாண முடியாத பிரச்னைகள் அல்ல அவை.

நாம் எல்லோரும் ஒரு குடும்பம். ஆகவே, நமது தகராறுகளைப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும்.

விவசாயத்துறை சீரமைப்பிலும், தொழில் வளர்ச்சியிலும், நாட்டின் புனர்நிர்மாண வேலைகளிலும் மக்கள்—குறிப்பாக விவசாயிகள்—பங்கெடுத்து, ஜனநாயக உணர்வும், ஒற்றுமையும், பலமும் பெருகும் சூழ்நிலையில் இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்வது சாத்தியம். அது ஒன்றே வழி.

இந்தியாவின் ஐக்கியம், எதிர்காலம், நம்முன்னுள்ள மகத்தான பிரச்னைகள்—இவைகளை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு ராஜ்ய புனரமைப்புப் பிரச்னையை அணுகவேண்டும். இல்லையென்றால் நாட்டுக்கு நாசம்தான் சம்பவிக்கும். நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிக்கும் சக்திகளுக்கு எக்காரணத்தைக் கொண்டும் மக்கள் இடமளிக்கக்கூடாது.



பேராசிரியர்

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை

தோற்றம் :
13—10—1888

மறைவு :
17—2—1956

கம்பனைக் கற்கும் நெறிகள்

[எஸ். வையாபுரிப் பிள்ளை]

இலக்கிய உணர்ச்சியை எவ்வாறு உண்டுபண்ணுதல் வேண்டும்? சிறந்த இலக்கியத்தை எம்முறையில் கற்றல்வேண்டும்? இவ்வகை இலக்கியத்தை எந்நெறியைப் பின்பற்றி பொது மக்களிடையே பரப்புதல் வேண்டும்? இராமாயணத்தை நாம் எவ்வாறெல்லாம் பயின்று வருகிறோம் என்பதைச் சிறிது நோக்கினால் சரியான நெறி நமக்குப்புலப்படாமல் போகாது. இராமாயணம் உலகத்தில் வழங்கும் சரிதங்களுள் மிக்க பெருமையும் கௌரவமும் பொருந்தியது. இதனைப்பற்றி எழுந்த காவியங்கள் உலகப் பிரசித்திவாய்ந்தன. தமிழில் இதனை இயற்றிய கம்பன் உலக மகா கவிகளில் ஒருவன். எனவே, இந்த இராமாயணம் தலைசிறந்த இலக்கியச் செல்வங்களுள் ஒன்று இதனைச் சரியான நெறியைக் கைக்கொண்டு நாம் கற்றல் மிக அவசியமாம். இப்போது வழங்கும் முறைகளை நாம் ஒரு சிறிது நோக்குவோம்.

இராம சரிதத்தை இராக் காலங்களில் பொது இடத்திலே மக்கள் பெருந்திரளாய்க் கூடியிருந்து கேட்டு இன்புறும்படியாகச் சொல்லிவரும் முறையானது வெகுகாலமாக நிகழ்ந்து வந்திருக்கிறது. இதைக் காலக்ஷேப முறை என்று நாம் குறிப்பிடலாம். இந்த முறையிலே கம்பன் செய்யுளைக் காட்டிலும் இராம சரிதத்தில் அதிக ஈடுபாடு காணப்படும். கேட்பவர்களுக்கு மகிழ்ச்சி விளைவிப்பதும் அவர்களுக்குப் பக்தி உண்டு பண்ணுவதும்தான் இந்த முறையின் முக்கியமான நோக்கங்கள். மகிழ்ச்சியை விளைவித்தற் பொருட்டு, பலவகையான கீர்த்தனங்களையும் தெம்மாங்குகளையும் பாடுவார்கள். இப்பாட்டுக்களைத் தவிர உபகதைகளையும் வேடிக்கைக் கதைகளையும் சொல்லி இன்பம் விளைவிப்பார்கள்.

இம்முறை எந்தக் காலத்தில் தோன்றியது என்று துணிந்து கூறமுடியாது. ஆனால், வைஷ்ணவப் பிரபந்தத்திற்கு வியாக்கியானம் வகுத்த ஆசிரியர்களது காலத்தில் இக்காலக்ஷேப முறை

சென்ற மாதம் காரைக்குடியில் நடைபெற்ற கம்பர் விழாவில், காலஞ்சென்ற தமிழறிஞர் திரு வையாபுரிப் பிள்ளை அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்தனர். கம்பனுக்கு அவர் செய்துள்ள சேவையைப் பலபடி எல்லோரும் பாராட்டினர். இச்சமயத்தில் கம்பராமயணத்தைக் கற்கும் நெறிகளைப் பற்றிய அவரது கட்டுரையை இங்கே வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறோம்.

தோன்றியிருக்கலாம். வடநாட்டுப் பக்தர்களுடைய சரித்திரத்தைக் காலக்ஷேப முறையில் கூறுவது தமிழ் நாட்டில் பரவிய பின்னர், இராமாயணக் காலக்ஷேப முறைக்கு ஒரு தனி மதிப்பும், பெருமையும் உண்டாகத் தொடங்கிற்று. காலக்ஷேபம் செய்வோர் சங்கீதத்திலும் வல்லவர்களாயிருந்தனர். ஆகவே, இந்த சங்கீதமும், இம்முறை மக்களிடையே பரவுவதற்குக்காரணமாயிருந்தது. தற்காலத்தில் இம்முறையானது மிக அருகியே காணப்படுகிறது. பொது மக்களிடமிருந்து யாசகம் பெறவுதவும் முறை இது என்று பலரும் இதனை ஏளனமாகக் கருதுகிறார்கள். இம்முறையில் கம்பனது கவிதைச் சிறப்பை அறியும் முயற்சி சிறிதும் இல்லையென்று சொல்லாம்.

வேறொரு முறையும் முற்காலந் தொட்டுப் பயின்று வந்துள்ளது. இதனை நாம் பண்டித முறை என்று கூறலாம். இலக்கண இலக்கியங்களைக் கற்ற வல்லவர்கள் இராமாயணத்தை எடுத்துக்கொண்டு, பொருளை விளக்கி உபந்நியாசம் செய்து வந்தனர். இப் பண்டிதர்கள் கம்பனது கவித்துவச் சிறப்பைக் காட்டிலும் தங்களது பாண்டித்தியச் சிறப்பே மிக முக்கியம் என்று தோன்றுமாறு இராமாயணப் பிரசங்கம் புரிந்தார்கள். ஒரு செய்யுளுக்குப் பலவகையான அர்த்தங்களைக் கற்பனை செய்வதில் தங்கள் கல்வியறிவு முழுவதையும் இவர்கள் காட்டி வந்தனர். இவ்வாறு நலிந்து பலபொருள் கூறுவதற்கு இவர்கள் இலக்கணத்தையும் பக்கத்துணையாகக் கொண்டார்கள். செய்யுளில் வரும் ஒவ்வொரு சொல்லையும் எடுத்துக்கொண்டு அதற்குப் பதசாரம் சொல்லித் தமது புலமையைப் பலரும் வியக்கச் செய்து வநதனர். இந்த முறையிலே கம்பனது உள்ளக் கிடக்கையைக் காணும் முயற்சி மிகவும் சிறிதளவே காணப்பட்டது.

மூன்றாவது ஒரு முறையும் முற்காலந்தொட்டு வழங்கி வருகிறது. அதனை நாம் தர்க்க முறை என்று கூறலாம். இம்முறையிலே செய்யுளில் வரும் ஒவ்வொரு சொல்லையும் எதிர்த்துப் பொருள் காண வேண்டுமென்று வற்புறுத்தி வந்தனர். ஓரிடத்தில் இவர்கள் கொண்ட தர்க்க நெறிப்படி பொருள் அமையாமல் போனால், வேறு இடங்களில் வரும் குறிப்புக்களால் பொருளை அமைத்துக் கொள்வதில் சிறிதும் தயங்கமாட்டார்கள். பூட்டைத் திறப்பதற்குரிய திறவுகோல் அதன் வாயில் இல்லாமற் போனால், ஏதேனும் வேறோரிடத்தில் அத்திறவுகோல் காணப்படுதல் உறுதி என்று நம்பி வந்தனர். கம்பராமாயணத்தில் அத்திறவுகோல் அகப்படவில்லை என்றால் அதனைத் தேடி வால்மீகி இராமாயணத்திற்குச் செல்லுவார்கள். அங்கும் வெளிப்படையாகக் காணமுடியாமற் போனால் சுலோகங்களை நலிந்து

பொருள் பண்ணித் தங்களுக்கு வேண்டும் குறிப்பைக் கொள்ள முயல்வார்கள். கம்பன், வால்மீகி முதலியோரது கவித்துவப் பெருமை தங்கள் தங்கள் ஆற்றலையும் சொல்லாற்றலையும் துணை வேண்டி நிற்கின்றன என்று கருதினர். தங்களால் தான் இப்பெருங் கவிஞர்கள் மதிக்கப்பட்டு வருகிறார்கள் என்றும், தாங்கள் நினைத்தால் இவர்களது பெருமையை அடியோடு அழித்துவிடலாம் என்றும் உள்ளூரச் செருக்குக் கொண்டனர். இம்முறையிலும் இத்தருக்க நிபுணர்கள் தங்கள் அறிவாற்றலின் விளையாட்டுக்களைக் காண முனைந்தார்களே தவிர, கம்பனைக் காண முலயவில்லை.

இத்தனை ஆழ்ந்து செல்லாது மேலெழுந்தவாரியாகசொற்களை வேட்டையாடித் திரியும் முறை ஒன்றும் ஒரு சிலரால் கையாளப்பட்டு வருகிறது. இதனை அலங்கார முறை என்று அழைக்கலாம். தாம் நீண்ட காலமாக வழங்கி வரும் சொல்லலங்காரத்தோடு, நூலில் அங்கங்கேயுள்ள தொடர்கள் முதலியவற்றை எடுத்தாண்டு, கம்ப இராமாயணத்தை இவர்கள் பிரசங்கிப்பார்கள். இம்முறையால், கம்பனை விநோத உணர்ச்சிக்குரிய ஒரு பொருளாகவே செய்துவிடுகிறார்கள். அவன் கவிதையின் பெருமையைக் 'காணுதற்குரிய முயற்சி, சிறிதும் காணுதல் இல்லை.

இனி நவீன ஆராய்ச்சிப் பொருள்களை மேற்கொண்டு இராமாயணப் பொருளை விளக்கும் முறைகள் சிலவற்றை நோக்குவோம். பொதுப்பட ஒன்றுகூறி அமையலாம். இம்முறைகள் அனைத்திலும் கம்பனையும் அவனது கவிதையையும் உணர்வதைக் காட்டிலும், அவன் கூறியுள்ள சரிதத்தின் உட்கிடையான பொருளே முக்கியம் என்று இவ்வகை ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். ஆகவே, இவர்கள் இராமாயணத்தை இலக்கியச் செல்வம் என்ற முறையில் அனுபவிக்க முயலவில்லை.

இவர்களுள் ஒரு சிலர் இராமாயணத்தைப் பூர்வ மக்களின் வரலாறுகளை மறைமுகமாகத் தெரிவிக்கும் ஒரு நூல் என்று கொள்ளுகிறார்கள். ஆரிய மக்கள் தென்னாடு நோக்கிப் புறப்பட்டு வந்து, தென்னாட்டு மக்களை வென்று இவர்களையும் இவர்கள் நாட்டையும் சுவாதீனப் படுத்திய வரலாற்றை இராமாயணம் குறிப்பதாகும் என்று அவர்கள் கொண்டுள்ளார்கள். குரங்குகளும் அரக்கர்களும் தமிழகத்துப் பூர்வ மக்கள் என்றும், இராமன் ஆரிய மக்களின் பிரதிநிதி என்றும், அவன் சத்துருக்களிடையே பகை மூட்டி, ஒரு சிலரைத் துணைக்கொண்டு, அச் சத்துருக்களை நாசம் செய்தனன் என்றும், சீதை திராவிடப்பெண் என்றும், திராவிடனான இராவணன் அவளைச் சிறையெடுத்துச் சென்றதுபொருத்தமே என்றும் இவ்வாறாகப் பல விநோத

மான முடிவுகளை இவர்கள் செய்திருக்கிருர்கள்.

மேற்கூறியதனேடு இவ்வகை ஆராய்ச்சி முடிந்துவிட வில்லை. தற்காலத்துள்ள ஜாதிச் சச்சரவுகளுக்கும் இராம சரிதத்தைத் துணைப் பிடித்துக் கொள்கின்ருர்கள். தமிழ் மக்களாகிய தங்களை இழிவு படுத்துவதற்கென்றே ஆரிய மக்கள் சூழ்ச்சி செய்து இந்நூலை இயற்றியுள்ளார்கள் என்றும், இந்தச் சூழ்ச்சியை அறியாதபடி, தமிழ் மகனுகிய கம்பன் வால்மீகியைப் பின்பற்றி தமிழில் ஆரியர்கள் பெருமையைப் போற்றி இராமாயணம் செய்துவிட்டான் என்றும் இவர்கள் துணிந்திருக்கிருர்கள். தமிழர்கள் பெருமையை உணர்த்துவதற்கு அவர்களுடைய பிரதிநிதியாக இவ்வாராய்ச்சியாளர் கருதும் இராவணனைக் கதாநாயகனுகக் கொண்டு இராவண காவியம் என்ற ஒரு நூலும் வெளியிடப் பட்டுள்ளது.

வேருெரு சாரார் இராம சரிதத்தில் வரும் நிகழ்ச்சிகளை எடுத்துக்கொண்டு, அவற்றைப் பொய்யா மெய்யா என்று தெரிவதே ஆராய்ச்சி நெறியெனக் கொண்டு உலகியற்கையோடு ஒப்பிட்டு, பொய் என்ற முடிவிற்கு வந்து, அவ்வளவில் திருப்தி யடைந்து மகிழ்கிருர்கள். இன்னும் ஒரு சார்ரார் இராமாயணத்தில் உப கதையாக வரும் அகலிகை சரித்திரம், சீதையின் பாதாதிகேச வருணனை முதலியவற்றைத் துணைக் கொண்டு, அதில் காம ரஸமே முக்கியமாகக் காணப் படுகிறது என்று முடிவுகட்டி, அதனை இலக்கியமாகக் கொள்ளுதல் தக்கதன்று என வற்புறுத்தி வருகின்றனர். இவ் விருமுறையையும் பின்பற்றுபவர்கள் இராமாயணத்தை நெருப்பிலிட்டுக் கொளுத்தி அழித்துவிட வேண்டும் என்ற முயற்சியையும் மேற்கொண்டுள்ளனர்.

ஆராய்ச்சி முறையைக் கைக்கொள்ளும் பிறிதொரு சாரார் இராமாயண சரிதத்தை உணர்ந்துகொள்ளும் அளவில் நில்லாது, அதற்கு உட்கிடையாகச் சில தத்துவங்கள் இருக்க வேண்டுமென்று கருதி, அத் தத்துவங்களைக் காணுவதற்கு முயலுகின்றனர். இம்முறையைத் தத்துவார்த்த முறை என்று கூறலாம். இராமனைப் பரமாத்மா வாகவும், சீதையை ஜீவாத்மாவாகவும் கொண்டு தத்துவார்த்தங்களை இவர்கள் இராம சரித்திரத்திற்கு கற்பிக்கின்ருர்கள். இவர்களும் இராமசரிதையில் வரும் நிகழ்ச்சிகளைப் புறக்கணித்துவிட்டு, கதை நயத்தையும் பொருட்படுத்தாது இலக்கியம்என்னும்கலையொன்று உள்ளது என்ற உணர்ச்சியே இல்லாதிருக்கின்றனர். காமரஸ முறையில் காமத்தை எங்கும் காணுவது போலவே, இவர்கள் எங்கும் தத்துவங்களைக் கற்பித்துக் கொள்ளுகின்றனர். இம்முறையிலும் இராமாயணம் ஓர் இலக்கியச் செல்வம் என்ற உணர்ச்சி காணப்படவில்லை.

மேற்கூறிய ஆராய்ச்சி முறை

களை விடுத்து, இலக்கிய நய முறைகள் சிலவற்றை இனி நோக்குவோம். இவ்வகையில் முதலாவதாகக் கூறத்தக்கது சித்திரமுறையாகும். இம்முறையில் கம்பன் கருத்துக்களை நயம்பட‌ச் சித்திரித்துக் காட்டுவதே முக்கிய நோக்கமாகும். இதில் காலக்ஷேப முறையும் நடையும் ஓரளவு பின்பற்றப்படுகின்றன. நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டுவது ஒன்றுண்டு. இராமாயணத்தைக் கேவலம் கதைப் பொருளாகக் கருதாது, கதை யமைப்பிலும், கதையைச் சொல்லும் கவிஞனின் கவித்துவ ஆற்றலிலும் நம் மனத்தை இம்முறை ஈடுபடுத்துகின்றது. இலக்கியம் என்ற உணர்ச்சி இம்முறையிலே நன்கு தோன்றுகிறது.

இம்முறையை அடுத்துக் கூறத்தக்கது ரஸிக முறையாகும். இராமாயணச் செய்யுட்களை ஓசை, தாளம், அழுத்தம், அமைப்பு முதலியவற்றின் மூலமாய்ப் பலரும் ரஸிக்கும்படியாகச் செய்வதே இம்முறையின் நோக்கம். கதை நிகழ்ச்சிகளைக் காட்டிலும் தமிழ் செய்யுட்களை எடுத்து, அவற்றின் நயங்களையே இம்முறை புலப்படுத்திச்செல்லும். தனிச்செய்யுட்களுக்குஅடி நிலம் (Background) அமைத்து அவற்றை விளக்குதலும் இம்முறையின் ஓர் முக்கிய இயல்பாகும். ஓசை, தாளம், அழுத்தம்அமைப்பு பொருத்தம் முதலியன தாம் கருதும் முறையில் ஒருசெய்யுளிலே அமையவில்லை என்று தோன்றினால் அச்செய்யுள் தம் கருத்துப்படி திருத்தம் பெறவேண்டும் என்ற கொள்கையும் இம்முறையைக் கையாளுபவர்களுக்கு உண்டு. நாணய பரிசோதகன் ஒரு நாணயத்தைச் சுண்டிப் பார்த்து ஓசையின் தன்மையால் அது போலியாதலையும் அல்லாமையையும் அறிதல்போல, செய்யுட்களின் ஓசையால் அவை ஆசிரியனது வாக்குத்தானா என்பதை அறியமுடியும் என்பர். இலக்கிய நயம், கவிதை நயம் இவைகளின் ஓர் அம்சமே இசை, தாளம் முதலியன ஆகும் என்பதையும், ஆசிரியனது செய்யுட்கள் எல்லா இடங்களிலும் ஒரு படித்தாகவே இருக்க மாட்டா என்பதையும் இவர்கள் புறக்கணித்து விடுகின்றனர். அன்றியும் நாணய பரிசோதனை முறையில் தவறுகள் நேர்வதற்கு இடமுண்டு என்பதையும் இவர்கள் கருதவில்லை. என்றாலும், செய்யுள் நயத்தை உணர்வதற்கு இது ஒரு சீரிய முயற்சியாகும்.

இம்முறையை அடுத்து நாம் நோக்க வேண்டுவது உளநூல் முறை. இராமாயணத்தைப் பல முறை கற்று, அதில் அமைந்துள்ள பாத்திரங்களின் உண்மை இயல்புகளை உணர்ந்து, அவ்வியல்புகளுக்குத் தக்கபடியும் சந்தர்ப்பங்களுக்குத்தக்கபடியும், பிற சூழ்நிலைகளுக்குத் தக்கபடியும் செய்யுட்களும் கதை நிகழ்ச்சிகளும் அமைந்திருப்பதைக் காட்டுவதே இம்முறையின் முக்கிய நோக்கமாகும்.

பாத்திரங்களின் உண்மையியல்பு வெளிப்படும் வாயில்களே கதை நிகழ்ச்சிகளும் சந்தர்ப்பங்களும். மேலை நாடுகளில் பெரிதும் ஆராயப்பட்டு வரும் உளநூல் உணர்ச்சி இம் முறைக்கு இன்றியமையாதது. இம்முறை இலக்கிய நயத்தை உணர்த்துவதில் மிக முக்கியமான ஓர் அம்சம் என்பது சொல்லாமலே விளங்கும்.

பாத்திர சிருஷ்டியின் சிறப்பைப் புலப்படுத்துவது சிற்ப முறையாகும். ஓர் அழகிய மாடத்தில் அதன் பல பகுதிகளும் பொருத்தமுற எவ்வாறெல்லாம் அமைக்கப்படுமோ, அதைப்போல, கதையின் பல பகுதிகளும், ஒருமை நயமும் வேற்றுமை நயமும் தோன்றத் தக்கவாறு ஒன்றோடொன்று பொருத்தமுற்று, முழுக்கதைக்கும் தகுந்த உறுப்புக்களாக அமைந்து, நிரம்பிமுடிதல்வேண்டும் என்று இம்முறைஉணர்த்துகிறது. நூல் முழுவதையும் ஒரே பார்வையில் கொண்டு அதன் பல பகுதிகளின் தகுதியையும் பொருத்தத்தையும் உணர்ந்து கதையின் ஒருமை நோக்கத்திற்கு இயையக் கதை அமைந்திருப்பதை இம்முறை தெரிவிக்கின்றது. இம்முறையும் இலக்கியத்தை உணருவதற்குப் பயன் படுவதேயாகும்.

இங்ஙனமாகப் பலவேறு முறைகளைப் பின்பற்றி இராமாயணம் நமது நாட்டில் கற்கப்பட்டு வருகிறது. இவற்றுள் சிறந்த முறைகள் அனைத்தையும் மேற்கொண்டு இராமாயணம் ஓர் இலக்கியம் என்பதை நன்குணர்ந்து, கம்பனது கவித்துவச் சிறப்பைக் காணுதல் தமிழ் மக்களது கடமையாகும். பேரிலக்கியங்களைக் கற்கும் முறைகள் மேற்கூறியவற்றால் ஒருவாறு புலனாகும்.

கடைசியாக இலக்கிய முறையைக் கூறலாம். இதில் சொல்-ஆட்சியும், கருத்து ஒற்றுமையும் முன் நூல்களிலும் சமகால நூல்களிலும், இராமாயணத்தில் பிற இடங்களிலும் வந்துள்ளனவற்றைக் கவனித்துச்செய்யுட்களுக்குப் பொருள் கொள்ளவேண்டும் என்று இம்முறை வற்புறுத்தும். பாடபேதங்களில் இம்முறை மிகுதியும் கவனம் செலுத்தும். இம்முறையில் பாட நிச்சயம் செய்தல் அவசியமாகும். இது கம்பனது காவிய உலகு எவ்வாறு உள்ளது எனத் துணிய முயலும். கம்பனது கவித்துவச் சிறப்புக்கள் பலவற்றையும் புலப்படுத்துதலும் இவ்விலக்கிய முறையின் ஓர் அம்சமாகும். —'சக்தி' 1950.

வெளிவந்துவிட்டது!

கம்பனும்-பாரதியும்

(ப. ஜீவானந்தம்)

விலை 4 அணா

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

சென்னை-2.

ஸ்டாலினைப் பற்றி நடக்கும் விமர்சனம் நம் நாட்டில் எல்லா ஜனநாயகவாதிகளையும், முற்போக்காளர்களையும் ஆழ்ந்த சிந்தனையிலாழ்த்தியுள்ளது. பிரதம மந்திரி நேரு, உபஜனாதிபதி ராதாகிருஷ்ணன் முதலானோர் இவ்விஷயத்தைக் குறிப்பிட்டு மனப்பூர்வமாக வரவேற்றுள்ளனர். இப்பிரச்சினையை விளக்க முற்படும் கீழ்க்கண்ட கட்டுரையை வாசகர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

தனி நபர் வழிபாட்டுத் தத்துவமும் அதன் விளைவுகளும்

[போலந்து நாட்டு ஐக்கிய தொழிலாளர் கட்சியின் மத்தியக் கமிட்டிப் பத்திரிகையான 'டிரிப் யூனு லூடு' மேலே கண்ட தலைப்புடன் தீட்டியுள்ள தலையங்கக் கட்டுரை.]

தனிநபர் வழிபாடு என்கிற தத்துவத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் பொதிந்துள்ள பிரச்சினைகள்—அறிவு ஆராய்ச்சித் துறைகள் அனைத்திலும், சமுதாய வாழ்வுத் துறைகள் அனைத்திலும் இந்தத் தத்துவம் வகிக்கும் செல்வாக்கை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் அடங்கியுள்ள பிரச்சினைகள்—சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது மகாநாட்டில் மிகவும் தீவிரமான முறையில் கிளப்பப்பட்டுள்ளன.

தனிநபர் வழிபாடு என்கிற தத்துவத்தின் அர்த்தமென்ன? சமுதாயத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட பிரதான நபர் ஆற்றும் பணியின் விளைவே; எல்லா பிரச்சினைகளிலும் அடங்கியுள்ள உண்மையைக் கண்டறியும் ஆற்றலும் அறிவும் அந்த ஒரு நபர் மட்டுமே அநேகமாக ஏகபோகமாகக் கொண்டிருக்கிறார்; அது மட்டுமல்ல, அவர் கண்டறிந்த உண்மையின் அடிப்படையில், சமுதாய வாழ்வின் சகல துறைகளையும் உருவாக்கி வழி செலுத்தும் ஆற்றலும் அறிவும் அந்த ஒரு நபருக்கே ஏகபோக உரிமை. இதுதான் அதன் அர்த்தம்.

இந்த வழிபாடு முறையில் அடங்கியுள்ள கருத்துக்களை எதிர்த்து சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஏன் இவ்வளவு பிடிவாதமாகப் போர்க் கொடி உயர்த்தியுள்ளது? என்ன காரணம்?

காரணம், முதலாவதாக: இக் கருத்துக்கள் அனைத்தும் பொய் என்பதினாலேயே. காரணம், யதார்த்தத்துக்கும் இக்கருத்துக் களுக்கும் சம்பந்தமே யில்லை என்பதினாலேயே. வாஸ்தவம்— சரித்திரத்திலும் சரி, சமுதாய வாழ்விலும் சரி, ஆற்றல்மிக்கத் தனி நபர்கள் முக்கியமான பாத் திரம் வகிக்கத்தான் செய்கிறார் கள். பிற்போக்குச் சக்திகளுக் குச் சாதகமாகச் சில தனி நபர் கள் வேலை செய்ய முனைவதும் வாஸ்தவமே. ஆனால் சரித்திரத் தின் முன்னேற்றத்தை அவர் கள் கொஞ்ச காலத்துக்குத்தான் தடுத்து நிறுத்தி வைக்கமுடியும். கடைசியில் சரித்திரம் அவர்களை யும் அவர்களின் சேவைகளையும் நிராகரித்துவிடுகிறது. ஆனால் ஆற்றல்மிக்க தனி நபர்கள் எனப்படுபவர்கள் மக்களின் விடு தலை அபிலாஷைகளுக்குக் குரல் கொடுத்து, இவ்வபிலாஷைகளை நடைமுறையில் அமுலுக்குக் கொண்டுவருவதற்கு உதவி செய்து, இவ்வபிலாஷைகளுக்கு ஏற்றமாதிரி செயல்புரிய கோடா னுகோடி மக்களைத் திரட்டுவ தற்கு உதவினால், அப்படிப்பட்ட வர்கள் மனித குலத்தின் வீரர் கள் என்று வரலாற்றில் இடம் பெறுகின்றனர். இந்தப் பாத்தி ரம் அவர்கள் எந்த அளவிற்கு வகிக்கமுடிகிறது என்றால், எந்த அளவுக்கு அவர்களின் வேலை மக்களை ஆகர்ஷிக்கிறதோ, எந்த அளவுக்கு மக்களைச் செயல் புரி யத் தூண்டுகிறதோ, போருக் கும் சேவைக்கும் எந்த அள வுக்கு கோடானுகோடி மக்களைத் திரட்டுகிறதோ அந்த அளவுக் குத்தான்.

ஒரு நாட்டின் செல்வத்தைப் படைப்பது மக்கள்; அதன் வாழ்வு முறையை உருவாக்கு வதும் மக்கள்; அதன் முன் னேற்றத்துக்கு உத்தரவாதம் செய்வதும் மக்கள் — மக்களின் போராட்டம்தான் சமுதாயத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது. சமுதாய வளர்ச்சிப் பாதையில் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடியும், மேலும் மேலும் அதி கமாக மக்கள் சமுதாய நிலையை உருவாக்குவதில் உணர்வுபூர்வ மாகப் பங்கு கொண்டு வருகிற தைத்தான் குறிக்கிறது.

எல்லா வகைப்பட்ட தனிநபர் வழிபாடு தத்துவங்களையும் எதிர் த்துப் போர் நடத்தியதில் உரு வானதுதான் மார்க்ஸிஸம். தாங்களே போராடித்தான் மக் கள் தங்களுடைய விடுதலையைப் பெற முடியும், புதுவாழ்வைச் சமைப்பவர்கள் மக்கள்தான், என்று மார்க்ஸிஸம் அன்றும் இன்றும் பிரகடனம் செய்து வந் துள்ளது.

தனி நபர் வழிபாடு முறைக் கும் சோஷலிஸத்திற்கும் கடுக ளவேனும் பொருத்தம் கிடை யாது. எல்லா வகைப்பட்ட யதேச்சாதிகாரத்தையும் சோஷ லிஸம் நிராகரிக்கிறது என்பதும் சமத்துவம், சுதந்திரம், சகோத ரத்துவம் என்கிற அடிப்படை களில் சமுதாய உறவுகளைச் சிருஷ்டிக்க சோஷலிஸம் முயற்

சிக்கிறது என்பதும், நாமறிந்ததே.

இது வெறும் தத்துவக் கோட்பாடுமட்டுமல்ல. யதார்த்தத்துக்கும், மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட் போதனைகளுக்கும், எதிராகவும், மாறுபட்டும், பொய்யாகவும் தனிநபர் வகிக்கும் பாத்திரம் பற்றி உள்ள கருத்துக்கள் எல்லாம், நடைமுறை விளைவுகளில் அசாதாரணமான தீமைகள் புரிகின்றன. இத்திசையில் செல்லும் கருத்துக்கள்எல்லாம் நடைமுறையில் பல துன்பமிக்க திரிபுகளுக்கு சித்தாந்த ரீதியில் அஸ்திவாரமாய் அமைகின்றன.

மார்க்சிஸத்துடன் லவலேசமும் ஒத்துப்போக முடியாத ஒரு கருத்து என்ற முறையில், சோவியத் சமுதாயத்தின்வளர்ச்சிக்குப் பெருந்தடையாயிருந்தது என்ற வகையில், இந்த தனிநபர் வழிபாடு முறையை எதிர்த்து சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி திண்ணமாகப் போர் துவக்கியுள்ளது.

லெனின் மறைவுக்குப் பின்னர், சோவியத் யூனியனில் சோஷலிஸம் நிர்மாணிக்கப்பட்ட காலகட்டத்தில், ஜோஸப் ஸ்டாலின் ஒரு பிரதான பாத்திரம் வகித்தார். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்கமிட்டியின் செயலாளர் என்கிற முறையில் ட்ராட்ஸ்கி, புகாரின் கருத்துக்களை எதிர்த்து நடந்த போரில், ஒரு சரியான நிலையைக் கைக் கொண்டார். ஒரு தனி நாட்டில் சோஷலிஸம் நிர்மாணிப்பது, கிராமப்புறத்தை சோஷலிஸ முறையில் புனர்நிர்மாணம் செய்வது, சோவியத் யூனியனைத் தொழில்மயமாக்குவது, ஆகிய விஷயங்களில் ஸ்டாலின் அவற்றிற்குச் சாதகமாகச் சரியான நிலையைக் கைக்கொண்டார். கட்சியின் தலைமையில் சோவியத் நாடுகள், ஐந்தாண்டுத் திட்டங்களில் செலுத்திய மகத்தான உழைப்பின் வாயிலாக, ஒரு வலிமைமிக்க சோஷலிஸ்ட் தொழில் எதிர்கால வெற்றிக்கு அடிப்படையாகச் சிருஷ்டித்த காலத்திலும்சரி, நாஜி ஆக்கிரமிப்பு காலத்திலும் சரி, இன்றைய கம்யூனிஸ்ட் நிர்மாணத்துக்கு அஸ்திவாரம் போட்டுவரும் காலத்திலும் சரி, ஸ்டாலின் ஆற்றிய பணி மகத்தானது. அக்காலகட்டத்தில் ஒரு பொய்யான, லெனினிஸத்திற்கெதிரான, கண்ணோட்டம் இருந்திருக்குமேயானல், சோவியத் யூனியனின் உயிருக்கே ஆபத்தேற்பட்டிருக்கும். இக்காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஸ்டாலின் புகழும், செல்வாக்கும் பெற்ருர். என்ருலும், படிப்படியாக, 1930-40க்கும் இடையில், ஸ்டாலின் தன்னைக் கட்சிக்கு மேலாக உயர்த்திக்கொள்ள ஆரம்பித்தார். கட்சியின்மீது தனது சித்தத்தையும், தனி நபர் முடிவுகளையும், திணிப்பதற்கு ஆரம்பித்தார். கட்சித் தலைமையின் கூட்டுத் தன்மை படிப்படியாகக் குறைக்கப்பட்டு கடைசியில் ஒழிக்கப்பட்டது. இவை யாவும் சோவியத் கட்சிக்கும்

உலகத் தொழிலாளர் இயக்கத்துக்கும் துன்பகரமான, கடுமையான, நஷ்டத்தை விளைத்தன.

20வது மகாநாட்டில் இந்தத் தீய விளைவுகள் பற்றி விவாதம் நடந்தது. இந்தத் தனிநபர் வழிபாடு முறை மார்க்ஸிஸ்ட் அறிவாராய்ச்சித் துறையில் போட்ட முட்டுக் கட்டைகள், அது விளைத்த வரட்டுத் தத்துவப் போக்கு, சில நூல்கள் தவறற்றவை, புனிதமானவைஎன்று கருதப்பட்ட போக்கு ஆகிய விவகாரங்கள் விவாதத்தில் குறிப்பிடப்பட்டன. சோவியத் நாட்டு வரலாறு சோவியத் கட்சியின்வரலாறு துறைகளில் ஏற்பட்ட சில தவருன பல பொய்யான, விஷயங்களை எதிர்த்தும் விமர்சனம் செய்யப்பட்டது. கட்சி வாழ்வுக்குரிய லெனின் கோட்பாடுகளும் கூட்டுத் தலைமைக்கான கோட்பாடுகளும் மீறும் நடைமுறையைப் பற்றியும் விமர்சனம் நடந்தது. கட்சித் தலைமையும் அரசாங்கத் தலைமையும் அளவுக்கு மீறி மத்தியப்படுத்தப் பட்டதும் விமர்சிக்கப்பட்டது. மற்றெல்லாவற்றையும் விட அதிகத் தீமையை விளைத்த ஒரு போக்கும்—அதாவது சட்டத்துக்கு உட்பட்டு புரட்சிகரமான ஆட்சியை நடத்தும் நடைமுறையை மீறுகிற போக்கும் குறிப்பிடப்பட்டது.

தனி நபர் வழிபாட்டின் விளைவாக அரசாங்க அங்கங்களின் மீது கட்டுப்பாடில்லாமல் போய் விட்டது. மேலிருந்து கூட்டு முறையில் கட்சித் தலைமை கட்டுப்பாடு செய்வதும் போயிற்று. கீழிருந்து மக்கள் செயல்படுத்தும் சமுதாயக் கட்டுப்பாடும் இல்லாது போயிற்று.

இந்த நிலைமைகளில் பந்தோபஸ்து இலாகா சீரழிவது சாத்தியமாயிற்று, சீரழியவும் செய்தது. கட்சியின் கட்டுப்பாட்டை மீறி இந்த இலாகா சுயேச்சையாக இயங்கிற்று. கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் மேலாக இந்த இலாகா நடந்துகொண்டது. பெரியா சம்பந்தமாக நாம் குறிப்பிடும் சீரழிவின் மூலஸ்தானம் இதுவே.

எவ்வளவுதான் ஒரு தனி மனிதன் ஆற்றல் படைத்திருந்த போதிலும் அந்தத் தனி நபரின் முடிவுகள் தவருன, தீய முடிவுகளுக்கு மிக எளிதில் கொண்டுபோய் விடுகின்றன, என்பதை சோவியத் கட்சியின் அனுபவம் தெளிவாகக் காட்டுகிறது.

இந்தப் போக்குகள் வெளிப்படுவதற்குக் காரணமாக இருந்த சூழ்நிலை சிக்கல் மிகுந்தது. ஏகாதிபத்திய வாதிகள் சூழ்ந்து முற்றுகையிட்டிருந்த நிலையில், தன்னந்தனியே ஒரே ஒரு சோஷலிஸ்ட் நாட்டில் தொழில் நிர்மாணம், கூட்டுப் பண்ணை விவசாயம் ஆகிய கடினமான பணிகளை நிறைவேற்றுவதற்கு நடந்த போராட்டத்தின் சூழ்நிலை அது. அதற்குக் கட்சியிலே ஒற்றுமையும் கட்டுப்பாடும் தேவைப்பட்டது வாஸ்தவமே. கட்சி அங்கத்தினர்களின் உணர்வு, கட்சியின் அரசியல்

கொள்கை சரி என்ற திண்ண மான முடிவு, தலைமையின் மீது நம்பிக்கை, அத்தலைமை பின்பற்றும் கொள்கையைப் புரிந்து கொள்ளுவது—என்கிற அடிப்படையில் ஒற்றுமையும் கட்டுப்பாடும் தேவைப்பட்டது. ஆனால் கட்சியின் ஒற்றுமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அத்தியாவசியத் தேவையான இந்த குணம்சங்கள் மேலும் மேலும் நீக்கப்பட்டு அதன் ஸ்தானத்தில் தனிநபர் வழிபாடு முறை ஆட்சி செலுத்த ஆரம்பித்தது. ஒரு தனிமனிதனை வரம்பின்றிப் புகழ்ந்து அவரது முற்றுமுணர்ந்த மா மேதையின் பால் குருட்டுத்தனமான நம்பிக்கையை வளர்த்ததின் வழியாக இந்த ஆட்சி நடந்தது. இதனால் பல தடவை உண்மைக்குப் பங்கமேற்பட்டது. அதனால் மேலும் பல தீய விளைவுகள் ஏற்பட முடிந்தது. கட்சி நடைமுறை வேலைகள் நடக்கிற காலத்தில், விவேகம் அறிவு எல்லாம் ஒரு தனி நபரின் ஏகபோகச் சொத்து என்கிற கருத்து பரவுகிற காலத்தில்-அந்த நபர் யாரையும் ஆலோசனை கேட்காமல், கட்சி ஸ்தாபனங்களுடன் உண்மையான விவாதம் எதுவும் நடத்தாமல், சுயமாக எடுக்கும் முடிவுகள் எல்லாம் பிசகற்றவை, முடிவானவை என்று ஏற்படுகிற காலத்தில்—தவறுகளும் திரிபுகளும் தோன்றுவது சாத்தியமாகிறது.

அங்கத்தினர்கள் சுயேச்சையாகச் சிந்தனை செய்வதையும், நிலைமையைப் புரிந்து கொள்ள அவர்கள் சுயேச்சையாக முடிவு செய்வதையும் கட்சி உதறிவிடுகிறது. கட்சிக் கொள்கையை உருவாக்குவதில் அங்கத்தினர்கள் உணர்வுபூர்வமாகப் பங்கெடுப்பதையும் கட்சி உதறிவிடுகிறது. அந்த நிலைமையில் தான் கட்சித் தலைமையும் கட்சி அங்கத்தினர்களும் பரஸ்பரம் அபிப்பிராயங்களை, உணர்ச்சிகளை பரிமாறிக் கொள்ளுவது, நின்றுவிடுகிறது. அதுமட்டுமல்ல, ஒரு பக்கத்தில் கட்சி முழுவதும், மற்றொரு பக்கத்தில் தொழிலாளி வர்க்கமும் விவசாய மக்களும், பரஸ்பரம் அபிப்பிராயங்களையும் உணர்ச்சிகளையும் பரிமாறிக்கொள்ளுவதும் நின்றுவிடுகிறது. இந்த பரஸ்பர பரிமாற்றம்தான் கட்சியின் வலிமைக்கு ஊற்றுக்கண்; அதுவே கட்சியின் கொள்கையை வாழ்வுடன் ஒட்டவைப்பதைச் சாத்யமாக்குகிறது. வாழ்விலேற்படும் மாறுதல்களுக்குப் பொருத்தமாக கட்சிக் கொள்கையை சீரமைப்பதையும் சாத்தியமாக்குகிறது. அப்பொழுதுதான் மக்களின் முன்னணிப் படையான கட்சிக்கும் உழைப்பாளி மக்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படாமல் பாதுகாக்கப்படும். சம்பந்தப்பட்ட கட்சி ஸ்தாபனங்களைக் கலந்தாலோசிக்காமல் கூட்டுக்குழு முறையில் பூரணமான விவாதம் நடத்தாமல், அந்தந்தத் துறையில் தகுதியுள்ளவர்களின் அபிப்பிரயாங்களையும், மக்களின் அனுப

வங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், ஒரு தனிநபர் சுயேச்சையாக எடுக்கும் முடிவுகள் அநேக தடவை தவருகவும் சில தடவை பொய்யாகவும் போய்விடுகின்றன என்பதை அனுபவம் நமக்குப் போதிக்கிறது.

தனி நபர் வழிபாடு முறைக்கு இன்னெரு தீயகுணம் உண்டு. அதாவது, அது தொத்துநோயாகப் பரவும் குணமுடையது. ஒரே மனிதன் எல்லா இடங்களிலும் எப்பொழுதும் இருந்துவர முடியாது, எல்லா விஷயங்களையும் முடிவு செய்யவும் முடியாது அல்லவா? எனவே கருத்து, நடைமுறை சம்பந்தப்பட்ட வெவ்வேறு துறைகளில், வெவ்வேறு இடங்களில், ''முடிவு கூறும் நபர்கள்'' எனப்படுபவர்கள் முளைக்க ஆரம்பிக்கின்றனர். மேலிருந்து கீழ்வரை ''முடிவு கூறும் நபர்கள்'' என்கிற ஒரு வம்சமே தோன்றி விருத்தியடைகிறது. இங்கேயும் ஒரு குறுகிய அளவில் அதே ஆபத்து பரவ ஆரம்பிக்கிறது. என்ன ஆபத்து? தனிப்பட்ட முறையில் சுயேச்சையாக எடுக்கும் தவருன முடிவுகள் என்கிற ஆபத்து எழுகிறது. தங்களைப் புறக்கணித்து, தங்களுக்குத் தெரியாமல், தங்களைக் கலந்தாலோசிக்காமல் எடுக்கப்படும் முடிவுகளை நிறைவேற்றுவதே தங்கள் கடன் என்கிற நிலைக்கு கட்சி அங்கத்தினர்கள் முழுவதும் சிறுமைப் படுத்தப்படுகிருர்கள். அதன் பிறகு சுய சிந்தனையில் ஈடுபடக் கூடிய நபர்கள் எல்லாம் தொந்தரவு கொடுப்பவர்களாகவும், தேவையற்றவர்களாகவும் ஆகி விடுகிருர்கள். இது புதிய புதிய திரிபுகளுக்கும் தீச்செயல்களுக்கும் உற்பத்தி ஸ்தானமாகி விடுகிறது.

கட்சி ஊழியர்களின்பால் கையாளும் கொள்கையை (Cadre Policy) இது குறிப்பிடத்தக்க தீமை விளைக்கும் முறையில் பாதிக்கிறது. ''திறமைமிக்கஊழியர்கள் எனப்படுபவர்கள், அதாவது மேலிருந்து வரும் உத்திரவுகளை திறமையுடன் நிறைவேற்றி வைக்கும் ஊழியர்களை மெச்சி பாரபட்சம் காட்டும் போக்கு ஒரு பக்கம் எழுகிறது. இன்னெரு பக்கத்தில் கட்சியின் பொதுவான கொள்கையை நிறைவேற்றி வரும் பொழுதே, அதைத் தத்தம் ஸ்தல நிலைமைகளுக்கும் வேலைத் துறைகளுக்கும் ஏற்றமாதிரி சுயேச்சையான சிருஷ்டி வகைப்பட்ட முறையில் கட்சிக் கொள்கையை அர்த்தப் படுத்துகிற அரசியல் ஊழியர்களை ஒழித்துக்கட்டும் போக்கும் எழுகிறது.

இந்நிலையில், ஆரம்பத்தில் கண்ணுக்குத் தெரியாமல் முளைத்து வளர்ந்து, பின்னல் பகிரங்கமாகவும் கூச்சநாச்சமில்லாமலும் மேன்மேலும் கட்சி வாழ்க்கை சம்பந்தப்பட்ட லெனின் கோட்பாடுகள் மீறப் படுகின்றன. தோழர்களிடையே சாதாரண மனித உறவுகள் நிலவுவதற்கு இந்த லெனின் கோட்பாடுகள்தான் அடிப்படை.

கட்சி வாழ்வில் உள்ளத் தூய்மையும் நேர்மையும் நிலவுவதில் இந்த லெனின் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பது நிர்ணயமான முக்கியத்துவம் பெறுகிறது. இந்தக் கேட்பாடுகளை மீறுவது கட்சிக்குள் பதவி வேட்டைப் போக்கையும், அடிமைப் புத்தியையும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் போக்கையும், இன்னும் இவற்றைவிட கொடிய நோய்களையும் கொண்டு வந்து விடுகிறது.

தனி நபர் வழிபாட்டு முறையின் விளைவுகள் உலகப் புரட்சி இயக்கத்திலும், போலந்திலும் வெளிப்பட்டு பாதிக்கத்தான் செய்தன. உள்கட்சி ஜனநாயகத்தின் மூச்சடைப்பு, பந்தோபஸ்து இலாக்காக்களின் தீச்செயல்கள் பல துறைகளில் நமது விஞ்ஞானத்தின் தேக்கம்—அதாவது போலிஷ் கட்சியின் மூன்ருவது மத்திய கமிட்டியின் விரிவாக்கப்பட்ட கூட்டத்தில் எவற்றை எதிர்த்துப் போராட முடிவு செய்ததோ அவையெல்லாம்—இந்தத் தனி நபர் வழிப்பாட்டுச் சூழ்நிலையில்தான் தோன்றி மலிந்தன. பிறகு இவை சம்பந்தமாக மத்தியக் கமிட்டி எடுத்த முடிவுகளை நிறைவேற்றுவதில் பெரும் அளவுக்கு காரியம் புரிந்துள்ளோம். உதாரணமாக, பந்தோபஸ்து இலாக்காவை சீர்திருத்தி அதை கட்சியின், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதில் இதைக் காணலாம். என்ருலும் பல துறைகளில் இந்த முயற்சி தளர்ந்துவிட்டிருக்கிறது. முடிவுகளை நிறைவேற்றுவதில், பழைய பழக்கங்கள் இன்னும் தடையாகவே இருந்து வருகின்றன. அதனுல் குற்றம் குறைகளைப் போக்குவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் போதிய அளவுக்கு இல்லை. நமது சமுதாயத்தில் துரிதமாக தீர்க்கவேண்டிய பிரச்னைகள் பலவுண்டு. கட்சி வாழ்விலும் எவ்வளவோ அளவுக்கு மாறுதல் செய்ய வேண்டியிருக்கிறது. சோவியத் கட்சியின் விவாதங்கள் நமது முடிவுகளை நிறைவேற்ற நடத்தும் போரை தீவிரப்படுத்துவதற்கு ஊக்கமும், உற்சாகமும், கருத்துக்களும், வழங்கியுள்ளன.

கட்சிக்குப் புதிதாக போதனை அளிக்கும் மகத்தான வேலை நடந்து கொண்டிருக்கின்றது. அது நம் ஒவ்வொருவருக்கும் கஷ்டமான வேலைதான். புதிய போதனை நடத்துவதற்கு நம் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆரம்பிக்கவேண்டும். நம்முடைய பழக்க வழக்கங்களை ஆழ்ந்து பரிசீலிக்கவேண்டும். நம்முடைய வேலை முறைகளையும், நாம் விவாதம் நடத்தும் முறைகளையும், ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். முன்னைவிட இன்று நமது கட்சியில் ஒருமைப்பாடும் ஒவ்வொரு கட்சி அங்கத்தினரின் சுயேச்சையான செயல் திறனும் தேவைப்படுகின்றன.

ஏனெனில், ஆபத்திலிருந்து மீட்கப்பட வேண்டிய பிரச்னை

மிகவும் மகத்தான பிரச்னையாகும். அதாவது, கட்சி அங்கத்தினர்களின், உழைப்பாளி மக்களின் ஆக்கல் பூர்வமான சுய முயற்சியை பலபடி வளர்ப்பது, நமது சோஷலிஸ்ட் நிர்மாணத்தை இன்னும் திறம்படக் கட்டுவதற்கு அவர்களின் முயற்சிகளை பலபடி வளர்ப்பது, வர்க்க விரோதியை எதிர்த்து நடக்கும் போரில் நமது சாதனங்களைப் கூராக்கி வைப்பது, என்கின்ற பிரச்னையே அது.

தனி நபர் வழிபாட்டு முறையால் சோவியத் யூனியனுக்கும் உலகத் தொழிலாளி இயக்கத்துக்கும் பெரு நஷ்டம் ஏற்பட்ட போதிலும், சென்ற பல ஆண்டுகள் சோவியத் நாட்டுக்கும் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் மகத்தான வெற்றிகளை அளித்த காலகட்டமாகும். இந்தக் காலகட்டத்தில்தான் சோவியத் நாடு ஒரு வலிவுமிக்க சோஷலிஸ்ட் அரசாக வளர்ந்தது. பாசிச எதிர்ப்பு முன்னணியில் பிரதான சக்தியாக விளங்கி மனித குலத்தைப் பாசிச அடிமைத்தனத்திலிருந்து பாதுகாத்தது. இந்தக்காலகட்டத்தில்தான் பசுபிக் மகாசமுத்திரத்திலிருந்து டான்யூப், எல்ப் நதிகள்வரை பல புதிய சோஷலிஸ்ட் அரசுகள் மலர்ந்தன.

உத்வேகம் ஊட்டும் தீரத்துடன் சோவியத் கட்சியின் 20-வது மகாநாடு ஒரு புதிய போரில் குதித்துள்ளது. லெனினிசத்தின் மறுமலர்ச்சியின் பெயரால், நமது மகத்தான லட்சியங்கள் மீது படிந்த மாசு மருவுகளை துடைத்து பரிசுத்தப் படுத்துவதின் பெயரால், சோஷலிச விடுதலை லட்சியத்துக்கு விரோதமான சகல அம்சங்களையும் நமது வாழ்விலிருந்து அகற்றி பரிசுத்தப்படுத்துவதன் பெயரால், இந்தப் போர் நடந்து வருகிறது. முன்னைவிட அதிகமாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுடன் பூரணமாக நாம் ஒன்றுபட்டு நிற்கின்றோம். சோவியத் யூனியனுடன் ஒன்றுபட்டு நின்று புதிய வெற்றிகளைச் சாதிக்கும் திசையில் வழிநடப்போம் என்ற நமது உணர்வு, நமது லட்சியங்கள், நமது முயற்சிகள், வழியாக நாம் சோவியத் யூனியனுடன் பிணைக்கப்பட்டுள்ளோம் என்றுமுன்னைவிட அதிகமாக உணர்கின்றோம்.

அறிஞனின் அல்லல்

★

அ. நடராஜன்

★

அறையின் மூலையில் தன்னந் தனியாக உட்கார்ந்துகொண்டிருந்தான் அந்தச் சிறுவன். சிறு உருளைகளையும் கப்பிகளையும் பயன்படுத்தி விதவிதமான விளையாட்டுக் கருவிகளைப் புனைவதில் ஒரு தனி மகிழ்ச்சி அவனுக்கு!

'கருவிகள் செய்வதில் இவனுக்குள்ள ஆர்வம் மெச்சத்தக்கதுதாது; பிற்காலத்தில் கணிதத்தில் மிகச் சிறந்தவனாகக் கூட விளங்கலாம்; ஆனால், வேண்டிய அளவு பணம் கிடைக்காதே, இதற்குப்பதிலாக இவன் வியாபாரத்தில் அக்கரைகொண்டால்.....? குவித்து விடலாமே பணத்தை' என்று அவன் தந்தை நினைத்தார்.

அச் சிறுவன்தான் கலிலியோ கலிலி. அரிஸ்டாடலின் கொள்கைகள் பல தவறானவை என மெய்ப்பித்துக் காட்டிப் புகழ்பெற்ற கலிலியோ இத்தாலி நாட்டில் பைஸா நகரத்தில் 1564ம் ஆண்டில் பிறந்தான். மகன் பெரும் வியாபாரியாகி ஏராளமான பணம் திரட்டவேண்டும் எனக் கருதிய அவன்தந்தை சிறுவனை நல்ல பள்ளிக்கூடம் ஒன்றுக்கு அனுப்பினார். படிப்பில்தான் அந்தச் சிறுவனுக்கு எத்தனை உற்சாகம்! அதைக் கவனித்தார் அவன் தந்தை; தன் மகனுடைய மனம் வாணிபத்தில் நிறைவு பெறாது என்பதை உணர்ந்தார். சரி, மருத்துவத்திலாவது பட்டம் பெற்று அதன் மூலமாக பணம் சம்பாதிக்கட்டுமே என நினைத்து கலிலீயோவைப் பைஸா பல்கலைக் கழகத்துக்கு அனுப்பினார்.

பதினெட்டே வயது நிறைந்த இளைஞன் கலீலியோ மாதா கோயில் வழியாகச் சென்றுகொண்டிருந்தான். உள்ளே சென்று இறைவனுக்கு வணக்கம் செலுத்திவிட்டு வரலாம் எனறு எண்ணி கோயிலுக்குள் நுழைந்தான். மாலை நேரம் போய் இருள் பரவத் தொடங்கியது. கோயிலின் பணியாளன் மேற் கூரையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த விளக்கை ஏற்றிவிட்டுச் சென்றான். பிரார்த்தனை முடிந்து எழுந்து நின்ற கலீலியோவின் கண்கள் அந்த தீபத்திலேயே லயித்துநின்றன.

விளக்கு ஊசலாடியது. தொடக்கத்தில் இடமும் வலமும் வெகுதூரம் சென்று சென்று திரும்பியது. பிறகு வலப் பக்கமும் இடப்பக்கமும் போகும் தூரம் குறைந்தது. உற்றுக் கவனித்தான் கலீலியோ. அதிக தூரம் செல்வதற்கும் குறைந்த தூரம் செல்வதற்கும் அது எடுத் துக்கொண்ட நேரம் ஒன்ருகவே இருந்ததுபோலத் தோன்றியது அவனுக்கு. தன் கண்களேயே நம்ப முடியவில்லே. தீர்மான மாகத்தெரிந்துகொள்ள விழைந் தது அவன் உள்ளம். நாடித் துடிப்புக்களேத் கொண்டே ஊச லின் அசைவு நேரத்தைக் கணக் கிட்டான். என்ன ஆச்சரியம்! அவன் நினேத்தது சரிதான்! வெவ்வேறு நீளங்கள் கொண்ட விளக்குகளின் அசைவு நேரங் களேயும் அளந்தான். "ஊசல் இடமும் வலமும்செல்லும் தூரத் தைப் பொறுத்ததன்று ஊசலின் அசைவு நேரம்; ஊசலின் நீளத்திற்குத் தக்கவாறுதான் அது மாறுகின்றது" என்னும் விஞ்ஞான உண்மையைக் கலீ லியோ கண்டுபிடித்துவிட்டான்.

அறிவின் ருசியைக் கண்டு விட்டான்; இனிச் சும்மா இருக்க மனம் வருமா? அந்தச் சமயத்தில் கணித ஆசிரியர் ஒரு வரின் நட்பு கிடைத்தது. சர்க் கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்த மாதிரிதான்! மிக விரைவிலேயே கணிதத்தில் மிகுந்த புலமை பெற்ருர் கலீலி யோ. இருபத்தாருவது வயதில் மருத்துவத்தில் செல்வம் திரட் டுவதற்குப் பதிலாக ஏழைக் கணித ஆசிரியராகப் பதவி ஏற் ருர்!

நூல் பல கற்ருர். ஆயினும் எதையும் பரிசோதனேக்கு உட் படுத்தாமல் ஒப்புக்கொள்ளும் மனப்பான்மை அவரிடம்இல்லே. பரிசோதனேகள் பல நிகழ்த்திய பின்னரே எதையும் அவர் ஏற் றுக்கொள்வார்.

அவர் காலத்திற்கு முன்னர் விஞ்ஞான உலகிலே பல தவ் ருன கொள்கைகள் நிலவி வந் தன. அவற்றில் ஒன்று: 'கன மான பொருள் வேகமாகவிழும்; லேசான பொருள் மெதுவாக விழும்' என்பது. அது தவறு என்பதைக் கலீலியோ உணர்ந் தார்; அறிஞர்களுக்கு எடுத்துக் கூறினர். 'பண்டைப் பேரறி ஞர்களான அரிஸ்டாடல் முதலி யோர் சொன்னது தவறு போலும்; இன்று இவன் சொல் வதுதான் உண்மை; ரொம்ப அழகாகத்தான் இருக்கிறது விஷயம்!' என்று அறிஞர்கள்(!) கேலி செய்தனர். கலீலியோ தனது கருத்தைப் பரிசோதனே மூலமாக நிலேநாட்டுவதாகக் கூறினர்.

ஒரு நாள் மாலே. பைஸா நகரத்துச் சாய்ந்த கோபுரத்தரு கே பெருங் கூட்டம். இளம் மாணுக்கர்களும் வயது சென்ற பேராசிரியப் பெரு மக்களும் நின்றுகொண்டிருந்தனர். "சந் தேகம் என்ன ஐயா? கனமான பண்டம்தான் லேசானதைவிட மிகவேகமாகவிழப்போகின்றது"

என்றுஒருவருக்கொருவர்பேசிக் கொண்டனர். புன்சிரிப்புடன் கலிலியோ கோபுரத்தின் மேல் அடுக்குக்குச் சென்றார்; தன் கையிலிருந்த இரு குண்டுகளைத் கைபிடிச் சுவரின்மீது வைத் தார். ஒன்று ஒரு பவுண்ட் நிறையுள்ளது; மற்றொன்று நூறு பவுண்டு நிறையுள்ளது. கீழே நின்றவர்களின் கேலிச் சிரிப்புக்கிடையே இரு குண்டு களையும் ஒரே சமயத்தில் கீழே தள்ளினார். இரண்டும் ஒரே சமயத்தில் தரைமீது விழுந்தன. கலீலியோவிற்கு — விஞ்ஞானத் திற்கு ஒரு மாபெரும் வெற்றி!

அவர் காலத்திலே நிலவி வந்த இன்னொரு தவறான கருத்து "பூமிதான் பிரபஞ்சத் தின் மையம். அது நிலையானது ஞாயிறும் பிறகோள்களும் அதைச் சுற்றி வருகின்றன" என்பதுதான்.

கலீலியோவின் காலத்திற்குச் சுமார் தொண்ணூறு ஆண்டு களுக்குமுன்னர்இருந்த கோபர்னி கஸ் என்னும் அறிஞர் கோள் கள் விண்மீன்கள் ஆகியவற் றின் இடங்களைக் கவனித்துச் சூரியன்தான் பிரபஞ்சத்தின் மையமாக இருக்கவேண்டும் எனக் கருதினார். மேலும், சூரி யன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைவதாகத் தோன்றுவது பூமி தன்னைத்தானே மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றிக்கொள்வத னால்தான் என்றும் பூமி தன் னையே சுற்றிக்கொள்வதோடு மட்டும் அல்லாமல் சூரியனையும் ஓராண்டில் சுற்றிவருகிறது என் றும் எடுத்துக் கூறினார் அவர். கலீலியோ கோபர்னிகஸின் கருத்துக்களைத் தீர ஆராய்ந்து அவை சரியானவை என்ற முடி விற்கு வந்தார். ஆனால், அக் காலத்தில் வாழ்ந்துவந்த அறி ஞர்கள் 'பூமி ஒரு கிரகமாவது? அது ஒளிவீசும் தன்மையுடை யதா? தன்னைச் சுற்றிக் கொண்டு அது சூரியனையும் சுற்றிவருகிறது என்பது எவ் வளவு வேடிக்கையானதாக இருக்கிறது? நாம் இருக்கும் வீடுகள், மரங்கள், நிலம், மிரு கங்கள், எல்லாம் சுற்றுகின் றனவா? நிலையாக வல்லவா இருக்கின்றன!' என்றெல்லாம் இகழ்வாகப் பேசினார்கள். ஆனால், கிரகங்களை இன்னும் சற்று அருகாமையில் கவனித் தால் எவ்வளவு நலமாக இருக் கும் என்று சிந்தித்துக்கொண் டிருந்தார்.

அந்தச் சமயத்தில்தான் 'மூக் குக்கண்ணாடி வில்லைகள் இரண் டைக் கண்ணிலிருந்து வெவ் வேறு தூரங்களில் வைத்துக் கொண்டு பார்க்கும்போது தொலைவில் உள்ள மாதா கோவில் மிகவும் சமீபத்தில் தெரிகிறதாம்!' என்றும் செய்தி கலீலியோவின் காதுகளுக்கு எட்டியது தானும் அங்ஙனமே செய்து பயன் அடையலாமே என நினைத்து வெளிப்புறம் குவிந்த கண்ணாடி வில்லை ஒன் றையும் உட்புறம் குவிந்த கண் ணாடி வில்லை ஒன்றையும் ஒரு குழாயின் இரு புறங்களி

லும் பொருத்தி அதன் மூலமாகப் பார்த்தார் கலீலியோ. மகிழ்ச்சி அவர் முகத்திலே தாண்டவமாடியது. தொலைவில் இருந்த பொருள்கள் அருகில் வந்துவிட்டனபோன்று தோற்றம் அளித்தன. மேலும், அவை தலைகீழாகத் தெரியாமல் சரியாகவே தெரிந்தன. கலீலியோ கண்டு பிடித்தது (இன்றும் அவர் பெயரால் வழங்கிவரும்) தொலை நோக்கி. இத்தாலிய நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் அவரையும் அவருடைய தொலை நோக்கியையும்பற்றியே பேச்சு! ஒவ்வொருவரும் அவருடைய தொலைநோக்கியின்மூலம் பார்க்க விரும்பினார்கள்.

கலீலியோ சலியாது உழைத்தார். தான் செய்த தொலை நோக்கியை மேலும் மேலும் அபிவிருத்தி செய்தார். நீல வானை ஆராய்ந்தார். பால்வீதி மண்டலம் எனப்படும் பகுதியின் ஒளி அதை ஆக்கியுள்ள பல நட்சத்திரங்களின் ஒளியே ஆகும் என்பதைக் கண்டார். சந்திரனை அருகில் பார்த்தார். பூமியைப்போன்றே அதுவும் மலைகள், பள்ளத்தாக்குகள், குழிகள் ஆகியவற்றுடன் இருப்பது புலனாகியது. 'கோபர்னிகஸ் கூறியது சரி; பூமி ஒரு சிறிய கிரகம்தான்' எனக் கூறினார் அவர்.

ஒருநாள் இரவு. வியாழன் என்னும் கிரகத்தைக் கவனித்துக்கொண்டிருந்தபோது ஒரு விசித்திரக் காட்சியைக் கண்டார். பூமிக்கு ஒரு சந்திரன் இருப்பதுபோல வியாழனுக்கு நான்கு சந்திரன்கள் இருந்தது தெரியவந்தது. அதுமட்டுமா? சூரியனுடைய உடலில் கருப்புப் புள்ளிகள் இருப்பதைக் கண்டார்; அவை நகர்வதால் சூரியனும் தன்னைத்தானே சுற்றிக் கொள்கிறது என்று சொன்னார். இந்த உண்மைகளை எல்லாம் உலகினருக்கு எடுத்துச் சொன்னார் கலீலியோ-சிலர் நம்பினார்கள். அவரையும் அவருடைய புதிய கொள்கைகளையும் கருத்துக்களையும் வெறுத்த பலர் நம்பவில்லை. தொலைநோக்கியின் மூலமாகத் தம் கண்களினாலேயே கண்டபிறகும் நம்பவில்லை; மற்றும் சிலர் அதன் மூலமாகப் பார்க்கவே மறுத்து விட்டனர்.

கலிலீயோ தம் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி மேலும் பல புதிய உண்மைகளைக் கண்டுபிடித்தார். கோபர்னிகஸ் கொண்டிருந்த கருத்துக்களே சரியானவை என மாணவர்களுக்கு எல்லாம் சொல்லிக் கொடுத்தார். அதன் விளைவாக பல துன்பங்களுக்கு ஆளானார்.

உண்மையை உண்மையென உரைப்பதற்கு உகந்த காலம் அன்று அது. கலீலியோவைச் சமயாசாரியர்கள் பலர் வெறுத்தனர். கிறிஸ்தவ வேதமாகிய பைபிளில் இல்லாததை எல்லாம் சொல்லிவருவதாகக் கலீலியோ மீது குற்றம் சாட்டப்பட்டது. மதாசாரியர்கள் பூமிதான் பிர

பஞ்சத்தின் மையம், அது நகருவதில்லை என்றெல்லாம் கூறி வந்த காலம் அது. மக்களின் மனத்தையும் கடவுள் பக்தியையும் கலீலியோ கெடுத்துவிடுவதாகவும் பைபிளுக்கு எதிராகப் போதனை செய்வதாகவும் ரோம் நகரத்திலிருந்த கிறிஸ்தவ சமயத் தலைவருக்குச் செய்திகள் பறந்தன.

மதகுரு அவரை ரோம் நகருக்கு வந்து அவருடைய கொள்கைகளுக்கு விளக்கம் தரவேண்டும் என்று பணித்தார். மதகுரு அவரை மரியாதையாகவே வரவேற்றார். தான் செய்த தொலைநோக்கியுடன் சென்று தம் கொள்கைகளைத் தக்க சான்றுகளுடன் விளக்கினார். மத குரு அவரை மன்னித்து அனுப்பி விட்டார். ஆனால், நாளுக்கு நாள் தொல்லைகள் பெருகின.

பாடுவா நகரத்தில் பணியாற்றிவந்த அவருக்குத் தன் சொந்த ஊராகிய பைஸாவுக்குச் செல்லவேண்டும் என்று தோன்றியது. பைஸா நகரத்து அரசனும் அதை வரவேற்றான். ஃப்ளாரன்ஸ் நகரிலே மீண்டும் அவர் தனது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தினார். அங்கிருக்கும் போதுதான் ரோம் நகருக்குச் சென்று கிறிஸ்தவ சமயத் தலைவரின் முன்னிலையில் தமது கருத்துக்களை விளக்கினார் கலீலியோ. எனினும் தமது கொள்கைகளை மறந்து விடவேண்டும் என்று கலீலியோவிற்குத் தண்டனை!

பழைய கிறிஸ்தவ சமயத் தலைவரும் கலீலியோவின் பெருமையை உணர்ந்தவரே. கலீலியோவிற்குச் சிறிது ஊக்கம் பிறந்தது. அந்தச் சமயத்தில் தான் கலீலியோ கோபர்னிகஸ் கொண்டிருந்த கருத்துக்களை விளக்கி ஒரு நூல் இயற்றினார். மக்கள் என்னவோ அதை ஆவலுடன் படித்தனர்; ஆனால், கலீலியோவின் விரோதிகளுக்கு அது பிடிக்கவில்லை. கலீலியோ பால் அன்பு கொண்டிருந்த சமயத் தலைவரின் மனம் கலக்கப்பட்டது; நூலைப் பறிமுதல் செய்யவேண்டும் என்று சமயத் தலைவர் உத்திரவிட்டார். கலீலியோவின் உடல் நலமும் மன உறுதியும் குன்றத் தொடங்கின. மீண்டும் அவர் ரோம் செல்லவேண்டும என்றுகட்டளை பிறந்தது. அவருடைய நண்பர்கள் பலர் அவர் தேக நலம் மிகவும் நலிந்துள்ளது என்றும் நீண்ட பிரயாணத்தை அவரால் தாங்கமுடியாது என்றும் வாதாடினார்கள். ஒரு பயனும் இல்லை; ரோம் நகருக்குச் செல்லவேண்டியதாயிற்று எழுபது வயது நிறைந்த கலீலியோ—அறிவுக்கு அபராதம்!

மத குருமார்கள் பலரின் முன்னிலையில் விசாரணை நடந்தது. எத்தனை கேள்விகள்! தெளிவாகவும் அமைதியுடனும் பதில் சொல்லி வந்தார் கலீலியோ; ஆனால், சமயசாரியர்கள் ஒப்புக்கொள்ளவில்லை! 'எல்லாம் தெரிந்தவனை எளிதில் திருப்தி செய்து விடலாம்; ஒன்றுமே

அறியாதவனையும் மிகவும் சுலபமாகத் திருப்தி செய்துவிடலாம். ஆனால், அரைகுறையாகத் தெரிந்துகொண்டவனை அவனைப் படைத்த கடவுள்கூட திருப்தி செய்யமுடியாது' என்னும் கவியின் கூற்று எவ்வளவு உண்மையானது! கலீலியோ தனது ஆற்றலைச் செலவழித்ததுதான் மிச்சம்; அவர் அதுகாறும் போதித்து வந்தவை எல்லாம் தவறு என்றும் சூரியனும் பிற கோள்களும்தான் நிலையாகப் பூமியைச் சுற்றுகின்றன என்றும் அவர் வெளிப்படையாகச் சொல்லவேண்டும் என்று மதாசாரியர்கள் தீர்ப்பளித்தனர். அருவருப்படைந்த கலீலியோ வாதித்துப் பயன் ஒன்றுமில்லை என்று தெரிந்து கொண்ட பிறகு 'உங்கள் கைகளில் நான் இப்போது சிக்கிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் எதைச் சொல்லச் சொன்னாலும் அதைக் கூறுகிறேன்' என்று வேண்டா வெறுப்புடன் சொன்னார்.

எனினும் அவரை மீண்டும் ஃப்ளாரன்ஸ் நகருக்குப் போக சமயத்தலைவர் அனுமதி தரவில்லை. 'வீட்டுச் சிறை'யிலேயே இருக்கவேண்டியதாயிற்று. அவருடைய மகனே காவல் காத்துவரும்படி உத்திரவு இருந்ததாம்! ஆனால், அவர் தம் பரிசோதனைகளை நிறுத்தவில்லை. தொலைநோக்கியைப் பயன்படுத்தித் தம் ஆராய்ச்சிகளை நடத்தினார். ஆனால், வெகு காலம் அதையும் செய்யமுடியவில்லை. தனது கண்பார்வையை அவர் இழந்துவிட்டார். அதைக் குறித்துத் தம் நண்பருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் 'எந்தப் பிரபஞ்சத்தை நான் அருகில் கொண்டுவந்தேனோ அதை இனிமேல் நான் என்றென்றைக்குமே பார்க்கமுடியாது. கடவுளுக்கு அதுதான் விருப்பம் போலும்' என்று கூறியுள்ளார்.

மனம் தளர்ந்தது; உடல் சோர்ந்தது; கண்பார்வையும் மறைந்துவிட்டது. எழுபத்தெட்டாவது வயதில் 1642ல் உயிர் உடலிலிருந்து நீங்கிவிட்டது. அவருக்கு நினைவுச் சின்னம் எழுபபுவது கூடச் சமயத்தலைவர்களால் அனுமதிக்கப்படவில்லையாம்!

திராட்சைப் பழ உற்பத்தி

பி. ஐ. பி.

இந்தியாவில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு திராட்சைப் பழ உற்பத்தி மிகவும் லாபகரமான தொழிலாகும். இப்போது வருஷத்தில் சுமார் 1,420 ஏக்கராவில் சுமார் 2,00,000 மணங்கு திராட்சை உற்பத்தியாகிறது. அதன் மதிப்பு சுமார் 120 லட்சம் ரூபாய்.

ஏக்கரா ஒன்றுக்கு 10,000 பவுண்ட் முதல் 15,000 பவுண்ட் வரையில் திராட்சைப் பழம் உற்பத்தியாகிறது; 7,500—10,000 குலேகள் வரையில் கிடைக்கின்றன. ஒவ்வொரு கொடியிலும் 35 குலே முதல் 50 குலே வரையில் கிடைக்கும். தென்னிந்தியாவில் 50,000 பவுண்ட் வரையில் உச்ச மகசூல் கிடைத்திருக்கிறது. உலக உச்ச சாதனே ஏக்கராவுக்கு 55,000 பவுண்ட்.

திராட்சைக் கொடி வளர்ப்பதன்மூலம் பழங்கள் கிடைப்பதோடுகூட, வேறு பல முக்கிய உபபொருள்களும் கிடைக்கின்றன. கொடியின் தண்டிலிருந்து "கிரீம் ஆப் டார்ட்டார்" என்னும் ரசாயனப் பொருள் கிடைக்கிறது. அது ரொட்டி, மிட்டாய்கள், சாயப்பொருள் முதலியவைகளின் தயாரிப்பில் உபயோகமாகிறது. திராட்சைப் பழத் தோலிலிருந்து ஒரு வித "ஜெல்லி" தயாரிக்கப்படுகிறது; அதன் விதையிலிருந்து தைலமும், பிண்ணுக்கும் கிடைக்கின்றன. அந்த எண்ணெயை ஆளி விதை எண்ணெயுடன் கலந்து வர்ணப் பொருள் தயாரிக்க உபயோகிக்கலாம். அந்தத் தைலத்தைச் சுத்திகரித்து ஆகார எண்ணெயாகவும் பயன்படுத்தலாம்.

திராட்சையைப் பயிர் செய்வதற்கு இதர பயிர்கள் விஷயத்தில் ஆகும் செலவைவிட அதிகச் செலவு ஆகும். இதர பழச் செடிகளேவிட திராட்சைப் பழச் செடி நீண்ட காலத்துக்குப் பலன் தந்துவரும்; சரியான பருவ நிலேயும், பராமரிப்பும் இருந்தால் திராட்சைக் கொடி 50 வருஷ காலத்துக்குப் பலன் தரும்.

இந்தியாவில் திராட்சை சாகுபடியை விஸ்தரிக்க நல்ல தோது இருக்கிறது. இந்தியாவில் இப்போது சுமார் 8,000 டன் திராட்சை இறக்குமதி செய்யப்படுகிறது. அதே அளவுக்கு உலர்த்திய திராட்சை பழமும்

இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் பல இடங்களில் திராட்சையை ஏராளமாகப் பயிர் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை இருக்கிறது.

திராட்சைக் கொடி சாகுபடி சிரமமான வேலை என்று சாதாரணமாக ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. ஆனால் அது உண்மையல்ல. அதை சுலபமாகப் பயிரிடலாம். அது எந்த மண்ணிலும் வளரும். சரளை, களி மண் முதலிய பல ரகப் பூமிகளிலும் அது வளரும்; அதிக ஆழமில்லாத பூமியிலோ, அதிக ஆழமுள்ள பூமியிலோகூட அதை வளர்க்கலாம். சற்று கவனமாகப் பாதுகாத்தால் வளமற்ற பூமியில்கூட அதைப் பயிரிடலாம். செம்மண், கரிசல் மண் உள்ள களியான பூமியில் அது ஏராளமாக மாசூல் தரும். பொடிப் பொடியாக உள்ள செம்மண் பூமியில் அது சுமாராக வளரும்.

மழை இல்லாவிட்டால்கூட, திராட்சைக் கொடி சிறிது காலத்துக்குத் தாக்குப் பிடிக்கும்; ஆனால் சிறிதளவாவது தண்ணீர் தேங்கவிட்டால் அதை அது தாளாது. எனவே திராட்சைக் கொடி வளருமிடத்தில் நல்ல வடிகால் திட்டம் இருக்க வேண்டும்.

திராட்சைக் கொடியில் மாரிக் காலத்தில் பூப் பூக்கும்; பிப்ரவரி-ஏப்ரல் காலத்தில் பழம் பறிக்கலாம். தக்ஷிண பீடபூமியில் இது மிகவும் ஏற்ற காலம். இதர இடங்களில் சற்று பிற்பட்டுத் தான் பழங்கள் மாசூக்குக் கிடைக்கும். பழம் நன்ருகத் திரளுவதற்கு சிறிது உஷ்ணமான பருவமும், பூமியில் சிறிது ஈரமும் தேவை.

திராட்சைத் தோட்டத்துக்குப் பாசன வசதி செய்தால், மாசூல் காலத்தைச் சிறிது பிந்திக்கூடத் தள்ளி வைக்கலாம். ஆனால், தோட்டத்தில் ஏராளமான தண்ணீர் தேங்கிவிடக் கூடாது; கொடியின் வேர் அழுகிவிடும்.

திராட்சைக் கொடி நல்ல திடமான கொடிதான்; அதைச் சரியானபடி ஆதாரங் கொடுத்துப் படரவிட்டு, கத்தரித்து விடாவிட்டால் பழமே காய்க்காது. எந்த ரக திராட்சைக் கொடி வளர்க்கப்படுகிறது என்பதை அனுசரித்து, படரவிடும் முறையும், கத்தரிக்கும் முறையும் மாறும்.

நல்ல பலன் கிடைப்பதற்கு கொடியை அதிக கவனமாகப் பாதுகாக்க வேண்டும்; வியாதிகளைத் தடுப்பது, பனியால் செடி வதங்கிவிடாமல் தடுப்பது முதலிய விஷயங்களில் மிகக் கவனமாக இருக்கவேண்டும்.



வீட்டிலே அடுப்பு எரியாது என்ற தனது சஹ தர்மிணியின் எச்சரிக்கை அவரது உள்ளத்தில் ஒரு மஹா பாரதத்தைக் கிளப்பியது.

ராயல் ஹோட்டலில் யுத்தப்பேச்சு வந்ததும் ராகுவும் கேதுவும் மும்முறை சந்திப்பதாக விளக்கம் கூறி மூன்ரும் உலக யுத்தம் மூளும் என்று கூறிவிட்டார் பண்டிட்ஜி.

கள்ள மார்க்கெட்டில் கொள்ளேலாபமடித்த பர்ச்சாராம் களிபேருவகையுடன் இரண்டு ரூபாய் தட்சிணை சமர்ப்பித்தான்.

ஆனல் இந்தப் பொய் கூறியதன் விளேவாக எத்தனே உள்ளங்களில் அவர் புயலேக் கிளப்பிவிட்டார்........

அதிலிருந்து அவர்கூடத் தப்பமுடியவில்லே.

ஜோதிடர்

மூலம் : சிந்தி மொழியில்,
பதன் பர்ஸவானி

தமிழாக்கம் :
குமாரி ஆர். சாவித்திரி

மாரிக்காலம் தன் முழு வேகத்துடன் ஆரம்பித்துவிட்டது. மூன்று நாட்களாக விடாமல் மழை பெய்துகொண்டிருந்தது. கடைவீதிகளில் கூட்டம் குறைந்துவிட்டது. தெருக்களில் ஓரிரு மனிதர்களே காணப்பட்டனர். தெருக்களில் ஒவ்வோர் இடத்திலும் பள்ளங்களில், சேறு கலந்த தண்ணீர் நிரம்பியிருந்தது. மோட்டார் முதலிய வாகனங்கள் அவ்வழியே செல்லும் பொழுது, அந்நீரில் அவற்றின் சக்கரங்கள் பதிந்து, தெருவில் செல்வோரின் உடைகளே நாசமாக்கிக்கொண்டிருந்தது. சிற்சில இடங்களில் அப்பள்ளங்களில், தவளேகள் மறைந்திருந்து கபகப கபகப என்று மழைக்கு வரவேற்பு கீதம் இசைத்துக்கொண்டிருந்தன.

மழையில் பண்டிட்மோதிலால்

சர்மா, ஒரு கரத்தில், பழைய கிழிந்த குடை ஒன்றைப் பிடித்துக்கொண்டும், கட்கத்தில் சில ஜோதிடப் புஸ்தகங்களை இடுக்கிக்கொண்டும், துரிதமான நடையுடன் வந்துகொண்டிருந்தார். நெடிய உருவம்; பெரிய கண்கள், ஆனால் குழி விழுந்தவை. அகலமான நெற்றியில் வீபூதிப்பட்டைகள் பிரகாசித்துக்கொண்டிருந்தன; தலையில் பாதிக்குமேல் நரைத்த முடி. கால்களில் சுதேசிச் செருப்பு—அதன் காரணமாக தெருவில் படர்ந்திருந்த சேறு அவரது வேஷ்டியில் பூவேலை செய்துகொண்டிருந்தது. சில சமயங்களில் குடையை நீக்கி ஆகாயத்தை அண்ணாந்து பார்ப்பதும், சில சமயங்களில் காற்றின் வேகத்தில் பறக்க யத்தனிக்கும் குடையை பலமாகப் பிடித்துக்கொள்ள முயற்சிப்பதுமாக அவர் காணப்பட்டார். சிறிது தூரத்திலுள்ள அந்தத் தெருக்கோடியில் உள்ள ராயல் ஹோட்டலுக்குச் செல்லவேண்டியிருந்தது. பண்டிட்ஜீ தனது நடையை இன்னும் துரிதப்படுத்தினார்.

ஹோட்டலின் வாயிலை அடைந்ததும் பண்டிட்ஜி ஆஸ்வாசத்துடன் பெருமூச்சுவிட்டார். குடையை மூடி ஒரு மூலையில் வைத்துவிட்டு, தன் வேஷ்டியில் ஓரத்தைப் பிழிந்துவிட்டுக்கொண்டே, பின்னும் ஓர்முறை ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தார். கருமேகங்கள் ஓடிவந்துகொண்டே இருந்தன.

"மழை விழுவதற்கான அடையாளமே இல்லை" அவர் உதடுகளுக்குள்ளேயே சொல்லிக்கொண்டார். அதே சமயம் மின்னலின் கூரிய ஒளி அவரது கண்களைக் கூசச் செய்தது.

டண் டணார்...வானம் கர்ஜித்தது, மழை பின்னும் கடுமையாயிற்று.

"கொட்டு, கொட்டு, அடே துரதிருஷ்டசாலியே!—திருப்தியாகும்வரை கொட்டு! பின்னால் ஒருவேளை சந்தர்ப்பமே கிடைக்காது"—துணிகளைப் பிழிந்துகொண்டு, உள்ளே சென்று ஓர் நாற்காலியில் அமர்ந்துகொண்டே பண்டிட் ஜீ கூறினார்.

"ஏ, டீகம்! கொஞ்சம் இங்கே பார்! ஒரு கப் ஸ்பெஷல் டீ கொண்டுவா; இந்தச் சனியன் பிடித்த குளிர், உடம்பையே விறைக்கச் செய்துவிடுகிறது" பண்டிட் ஜீ பல்லைக் கடித்துக்கொண்டே சொன்னார்.

எந்தப் பொருள் பண்டிட்ஜீயின் டீயை 'ஸ்பெஷல் டீ' யாகச் செய்யும் என்பதை டீகம் நன்கு அறிவான். ஆனால் அவன் வேண்டுமென்றே, டம்ளரில் ஒரே ஒரு ஸ்பூன் சர்க்கரை போட்டு, டீயை பண்டிட்ஜியின் முன் வைத்தான்.

டீக் கோப்பையில் அவர் பார்வை விழுந்ததுமே, அவர் முகம் மலர்ந்தது. ஆனால் ஒரு வாய் குடித்ததுமே அவர் முகம் கோபத்தினால் சிவந்தது, அவர் கூறினார்—"டீகம், குளிரில் உன் மூளைகூட வேலை செய்வதை

நிறுத்திவிட்டதா என்ன? உனக்கு, நான் கசப்பான டீ குடிப்பதில்லை என்று நன்கு தெரியும். இருந்தும்..."

இன்னும் சிறிது சர்க்கரையை கோப்பையில் போட்டுக்கொண்டே டீகம் பதில் கூறினன் "ஒரணு டீயில் எவ்வளவு சர்க்கரை போடமுடியும்-சர்க்கரையின் விலையும் ஏறிக்கொண்டே போகிறது, மேலும்......"

கவலைப்படாதே எனது கிடங்கிலிருந்து, இரண்டு மூனு மூட்டைகள் எடுத்துவா-டீ குடித்துக்கொண்டே பண்டிட்ஜி பதிலுரைத்தார்.

பண்டிட்ஜியிடம் பேச்சு நிரம்பிய சொற்கிடங்கைத் தவிர வேருென்றுமில்லை என்பது டீகமுக்குக்குத் தெரியம்.

அதே தருணத்தில் டப், டப் என்று இரு தீர்த்துளிகள் பண்டிட்ஜியின் தலையில் விழுந்தன. கூரையிலிருத்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. பண்டிட் ஜியின் முகம் மாறியது. அவர் கோப்பையிலிருந்து டீயை ஒரே தடவையில் விழுங்கிவிட்டு கோப்பையை மேஜையின்மேல் எறிந்துகொண்டே கூறிஞர்—"பார் டீகம், நான் சொல்கிறேன் இந்த ஹோட்டலின் பெயரை மாற்றிவிடு. இந்த ஓட்டல் எப்பொழுதும் 'ராயல்' ஆக முடியாது நீ ஒரு நல்ல பெயரின் மறைவில் ஜனங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிருய். நினைவு இருக்கட்டும், உன்மேல் கேஸ் போட முடியும்!"

டீகம் பண்டிட்ஜியின் ஸ்பாவத்தை மிக நன்ருக அறிந்தவன். ஒவ்வொரு விஷயத்திலும் ஏதேனும் குற்றம் குறை கூறுவது அவர் வழக்கம். டீகமிற்கும் கேலி செய்யத் தோன்றியது. டீக் கோப்பையை மேஜையின் மேலிருந்து எடுத்துக்கொண்டே, பண்டிட்ஜியின் கண்களை உற்று நோக்கியவாறு கூறினன் "பண்டிட்ஜீ, பெயரால் யார்தான் ஏமாற்றுவதில்லை? உங்களையே, சான்ருக எடுத்துக்கொள்ளுங்கள், உங்களது பெயர் எவ்வளவு பிரமாதமாகஇருக்கிறது, 'மோதிலால்'! ஆனல் எல்லாரும் அறிவார்கள் உங்களிடம் எப்பேர்ப்பட்ட முத்துக்களும், மணிகளும் இருக்கின்றன என்று"! 'ஹி-ஹி-ஹி'! டீகமின் சிரிப்பொலியுடன், மற்றும் அங்கு அமர்ந்திருந்த யாவரது சிரிப்பொலியும் கலந்து ஒலித்தன.

டீகமைப்போன்ற படிக்காத, ஒன்றும் தெரியாதவன் கூட, ராஜா பீர்பலைப்போன்று உடனுக்குடன், பதில் கூறமுடியாத முறையில் பதிலளிக்க முடியும் என்று பண்டிட்ஜி சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அடுத்த கணமே அவரது முகம் கோபத்தினல் சிவந்தது. ஹோட்டலில் உட்கார்ந்திருப்பவர்களைப் பார்த்துக் கேட்டார் "போதும் ஐயா, உங்களுக்கு பல்லைக்காட்ட மட்டும்தான் தெரியுமா அல்லது வேறு ஏதேனும் தெரியுமா".

பண்டிட்ஜீயின் இக் கோப ஸ்வரூபத்தைப் பார்த்ததும்,

எல்லோரும் அமைதியாயிருந்தனர். ஆனால் சிறிது நேரத்திற்குப் பிறகு பண்டிட்ஜி, அந்த மேஜையை விட்டு, வேறோர் மேஜைக்குச் சென்றதும், பின்னாலிருந்து ஒருவன், அவரைக் கேலியாகக் கூப்பிட்டான். பண்டிட்ஜி திரும்பிப் பார்க்கையில் இருபள்ளிமாணவர்கள், பொங்கி வரும் சிரிப்பைக் கையினால்மூடி அடக்க வீண்முயற்சி செய்து கொண்டிருந்தனர். பண்டிட்ஜீயின் புருவங்கள் நெரிந்தன, கண்கள் சிவந்தன.

சிறுவர்கள் பேசாமல் தங்கள் முகங்களைப் பத்திரிகையால் மறைத்துக்கொண்டனர்.

டணார் டணார்......வானம் கர்ஜித்தது. மகாபாரதம் பிரகடனப்படுத்தப்பட்டு விட்டதுபோலும், அர்ஜுனன், கிருஷ்ணரின் கட்டளையின் பேரில் அஸ்திரங்களால் தன்னை அலங்கரித்துக் கொண்டு தன் பிதாமஹர் பீஷ்மருக்கும், துரோணருக்கும் எதிராக மறுபடியும் வந்து விட்டதைப் போலும் இருந்தது அக்கர்ஜனை. பண்டிட்ஜி கண்களை மூடிக்கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவரது இதயத்தில் ஒரு மஹாபாரதம் நடந்து கொண்டிருந்தது.

மூன்று நாட்களாக விடாமல் மழை பெய்ததின் காரணமாக, பண்டிட்ஜியின் ஜோஸ்யத் தொழில் மிகவும் மந்தமாகிவிட்டது. இம்மூன்று நாட்களாக அவரிடம் ஒருவன் கூட வரவில்லை. அன்று காலை பசியுடன் வீட்டை விட்டுக் கிளம்பும் பொழுதே அவரது மனைவி கூறினாள்: "அரிசி முழுவதும் தீர்ந்தாகிவிட்டது; கோதுமையும் ஒரு அரை வேளைக்குத்தான் காணும். இன்று தானியம் வாங்கி வராவிட்டால், நாளைக்கு அடுப்பு எரியாது."

பண்டிட்ஜியின் மனதில் இதே மஹா பாரதந்தான் மூண்டிருந்தது. சாதாரணமாக அவர் மிகச் சாமர்த்திய முள்ளவர். வாடிக்கைக்காரனைப் பார்த்தவுடனேயே, அவன் எவ்விஷயத்தினால் சந்தோஷமடைவான், எத்தனை ரூபாய் கொடுப்பான் என்பதைத் தெரிந்துகொண்டு விடுவார்.

அவர் ஏழைகளிடம் மழை காலத்தில்அவர்களுக்குப் பணம் கிடைக்கும் என ஆறுதல் கூறினால், பணக்காரர்களிடம் அவர்களது லாபம் அதிகரிக்கும் என ஆசை காட்டுவார். வாலிபர்களிடம் அவர்களது காதல் வெற்றியடையும் என்று நம்பிக்கையூட்டுவார்; கிழவர்களிடம் அவர்களது நீண்ட ஆயுளைப் பற்றியும், ஸ்திரீகளிடம் அவர்களது புத்திர பாக்கியத்தைப் பற்றியும், அரசியல்வாதிகளிடம் அவர்கள் மந்திரி ஆவார்கள் என்பது பற்றியும் துணிந்து நம்பிக்கை ஊட்டுவார். அவர் தனது ஞானத்தை (தனக்குத் தெரிந்ததை) தன்னுள்ளேயே வைத்துக்கொள்ளாமல், எல்லோருக்கும் பங்கிட்டுவிடுவார் என்பது ஒன்றே அவரது உதார குணத்திற்கும் பெருந்தன்மைக்கும் எடுத்துக்காட்டாகும். அவர்

பெருமையுடன் நாளைய சீதோஷ்ணத்தைப் பற்றிச் ஜோஸ்யம் கூறுவார்; ஒளி நிரம்பிய எதிர்காலத்தைப் பற்றிப் பேசுவார். ஆனால், இன்று......

மூன்று நாட்களாக அவரிடம் யாருமே வரவில்லை. யாருக்குமே, தனது எதிர்காலத்தைப் பற்றிய கவலைகள் இல்லை போலும்! காலையிலிருந்து மாலை வரை, அம்மூடிய கடைக்கு வெளியே, தனது புஸ்தகங்களை வைத்துக்கொண்டு, தெருவில் போவோர் வருவோரைப் பார்த்துக்கொண்டிருந்தார். எதிரே கருப்பாகவும், வெளுப்பாகவும், சிறிய பெரிய குடைகள் ஏந்தியவர்கள் வந்துகொண்டும், போய்க்கொண்டும் இருந்தார்கள். ஒருவருக்கும் நேரமே இல்லை போல், ஒருவரும் நிற்கவில்லை. அவர் பக்கமும் நெருங்கவில்லை. பண்டிட்ஜி கொட்டாவி விட்டுக்கொண்டே, வெறுங்கையுடன் வீட்டிற்குத் திரும்பிச் சென்றார். அவரது குழந்தைகளுக்கும் அதே போன்ற குடைகள் அவசியமாக விருந்தது. அவர்கள் பள்ளிக்கூடத்துக்கு நனைந்து கொண்டே சென்று வந்தனர். ஆனால்......

ஹோட்டலில் ஓர் பெரிய விவாதம் ஆரம்பித்திருந்தது. மாஸ்டர் லோகமூலிற்கும், பர்ச்சாராமிற்கும் இடையே வாத விவாதம் நடந்துகொண்டிருந்தது. லோகமூல் அங்குள்ள சிந்தி ஸ்கூலில் ஆசிரியராக இருந்தார். அவருக்கு சர்க்காருக்கு எதிராகப் பேசவேண்டிய குறைகள் பல இருந்தன. அவரது சம்பளம் மிகக் குறைவாக இருந்தது. அதனால், அவரால் தனது முக்கிய தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்துகொள்ள முடிவதில்லை. மற்றொரு புறம் பரச்சாராம் மிக குதூகலத்துடன் இருந்தான். அவன் கள்ள மார்க்கட்டில் நிறையப் பணம் சம்பாதித்திருந்தான்—அதற்கு அவனது பருத்த வயிறே சான்றாகவிருந்தது. அவன் தனது வயிற்றைக் கையினால் தடவிக்கொண்டே கால்களை மேஜையின்மேல் போட்டுக்கொண்டு சம்பாஷணையில் மூழ்கியிருந்தான்.

லோக்மூல் கூறினான்: 'நமது சர்க்காரிடமிருந்து, விட்டு விட்டு வந்த சொத்துக்களுக்கான நஷ்டஈடு எதிர்பார்ப்பது வீண் தான். கடந்த நான்கு வருடங்களாக வாக்குறுதி கொடுத்து வருகிறது, ஆனால் இதுவரை ஒரு எட்டணாகூடப் பெயரவில்லை. ஜனங்களுக்குச் சர்வநாசம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. ஒரு வேளை சில நாட்களுக்குப் பிறகு அகதி-விடுதிகளே காலிசெய்யப்பட்டு விடும்.''

பரச்சாராம் இதை எதிர்த்துக் கொண்டிருந்தார். இவ்வாறே வாத - விவாதத்தின் எல்லை, அகதி - விடுதிகளைப் பற்றிய சிறிய அரசியலிலிருந்து, உலக அரசியலாக விரிந்து பரந்துவிட்டது.

இப்பொழுது லோக்மல் உலக அரங்கில் இந்தியாவின் சார்பில் சமாதானத்தை விரும்பும் தூதுவனது பாகத்தை ஏற்றுப்

பேசிக்கொண்டிருந்தான் "மேற்கு ஜெர்மனியை ஆயுத பாணியாக்கினல், அங்கு மறு படியும் ஹிட்லர் அரசாங்கம் துவங்கும்—அதன் பலன் மூன்ருவது உலக மஹா யுத்தம் நிச்சயம் ஏற்படும்."

டீகம் டீக் கோப்பையில் பாலே ஊற்றி, ஸ்பூனினல் அதன்மேல் பலமாகத் தட்டினன், இவ் விஷயத்தை ஆமோதித்து, அபாய மணி அடிப்பதுபோல். பண்டிட்ஜியின் சிந்தனைப் பிரவாகத்திற்குக் கூடத் தடை ஏற்பட்டுவிட்டது. திடுக்கிட்டுக் கேட்டார்—'என்ன சொன்னய்?'

"மூன்ருவது மஹா யுத்தம், பண்டிட்ஜீ, மூன்ருவது மஹா யுத்தம்" வெற்றிலை – பீடாக்காரன் ஒரு மராட்டிக்காரனுக்கு வெற்றிலை கொடுத்துக் கொண்டே தன் பற்களைக் காட்டிப் பதில் கூறினன்.

லோக்முலும், மற்றவர்களும் பண்டிட்ஜியின் அருகில் வந்து கேட்டனர் "பண்டிட்ஜி, நீங்கள் உங்கள் ஜோதிடத்தின்மூலம் உனக்குப் போட்டு, மூன்ருவது யுத்தம் ஏற்படுமா ஏற்படாதா என்று சொல்லுங்கள்?"

பண்டிட்ஜி, சிறிது நேரம் பைத்தியம்போல் அங்கும் இங்கும் நோக்கிக்கொண்டிருந்தார். எதிரே ஒரு சினிமா நடிகையின் படம் தொங்க விடப்பட்டிருந்தது. அதன் அருகிலேயே கோகோ கோலாவின் சுவரொட்டி விளம்பரம்—அதில் அரை நிர்வாண உடையில் ஓர் யுவதி, சமுத்திரக் கரையில் அமர்ந்து கோலா பருகிக்கொண்டிருந்தாள். கூடவே சென்ற வருடம் நடந்த தேர்தலின் இரண்டொரு சுவரொட்டிகளும் இருந்தன. இப் பக்கம் பார்த்தும்கூட, பண்டிட்ஜி வேறு ஏதோ ஓர் உலகத்தில் இருந்தார். அவர் ஓர் விசித்திரமான திட்டம் உருவாக்கிக் கொண்டிருந்தார். திடீரென அவருக்கு ஓர் பயங்கரமான தமாஷ் தோன்றியது. அவர் மேஜையிலிருந்து ஜோதிடப் புஸ்தகத்தை எடுத்தார், காயை உருட்டி, உருட்டி ஓரிடத்தில் நின்றுவிட்டார், பின் மிக கவனத்துடன் பார்க்க ஆரம்பித்தார். பின் காகிதத்தையும், பென்சிலையும் எடுத்து, ஏதேதோ சொற்களை எழுதி கணக்குப் போடத் துவங்கினர். பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, இரண்டு நிமிடங்கள் கண்களை மூடிக்கொண்டு, முகத்தில் பயத்தின் அறிகுறிகளைக் காட்டிக் கொண்டே கூறலானர். "மூன்ருவது மகா யுத்தம் நிச்சயம்தான்! இவ்வருடம் ராகுவும் கேதுவும் மூன்றுமுறை ஒன்று சேர்கின்றனர், இது மிகப் பயங்கரமான சம்பவம். இதன் காரணமாக யுத்தம் மட்டும் மூளாது, ஆனல் பஞ்சம், வெள்ளம் முதலியன ஏற்படும், நாட்டில் அமைதியின்மையும், மஹாமாரியும் பரவும்!......நாராயன்! ......நாராயன்!"—பின் அமைதியுடன், இரு கரங்களினலும் அவர் தனது காதுகளைப் பிடித்துக்கொண்டார்.

வானத்தில் மறுபடியும் கர்ஜனை கேட்டது. ஹோட்டலில் அமர்ந்திருந்த யாவரும் நடுங்கினர். அவர்களுக்கு அவரது ஆருடத்தில் அபாரமான நம்பிக்கை பிறந்துவிட்டதுபோலும். எல்லோருடைய முகங்களும் அச்சத்தால் வெளிறித் தொங்கிப்போயிருந்தன. வெற்றிலைக்காரன், சிறிதுநேரம் முன்பு, இதே விஷயத்தை தமாஷாக நினைத்து பற்களைக் காட்டிச் சிரித்துக்கொண்டிருந்தவன், பண்டிட்ஜியின் பேச்சைக் கேட்டு, பீடா சுற்ற மறந்துவிட்டான்.

டீகமின் வேகமும் குறைந்துவிட்டது. அவன் இப்பொழுது ஓர் ஊமையைப்போல் பேசாமல், மெதுவாக வேலைசெய்து கொண்டிருந்தான். மாஸ்டர் லோக்மூல் அவநம்பிக்கையுடன் பண்டிட்ஜியின் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் பண்டிட்ஜி, தன் வாயை மறுபடியும் திறக்கவே அவசியமில்லை என்ற நிலையில் கம்பீரமாகக் காணப்பட்டார். மௌனமாக தனது புஸ்தகங்களை எடுத்துக் கொண்டு, குடையைக் கையில் எடுத்துக்கொண்டு, விரைவாக ஹோட்டலுக்கு வெளியே சென்றார்.

சிறிதுதூரம் சென்றவுடன் அவருக்குப் பின்னால் கைதட்டும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்க்கையில், பரச்சாராம் எட்டி நடைபோட்டுக்கொண்டு அவரை நோக்கி வந்துகொண்டிருந்தார். பட்டிட்ஜியின் முகத்தில் மகிழ்ச்சியின் குறிகள் தென்பட்டன. அருகில் நெருங்கியவுடனேயே பதைபதைப்புடன் கேட்டார் "பண்டிட்ஜி, இது உண்மைதானா?"

—"என்ன?"

—"மஹா யுத்தம் ஏற்பட்டு, தேசத்தில் பஞ்சம் ஏற்படும் என்பது நிஜமா?"

ஹோட்டலில் இவ்விஷயத்தைக் கேட்டதுமே பரச்சாராமின் முகத்தில் முதலில் சிறிது வருத்தக் குறிகள் தென்பட்டபோதிலும், விரைவிலேயே புன்சிரிப்பு படர்ந்துவிட்டதைக் கவனித்திருந்தார் பண்டிட்ஜி. இவையெல்லாம் பார்த்தபின், பண்டிட்ஜி, பரச்சாராமின் கருத்தை உணர்ந்திருந்தார். பரச்சாரரம் கள்ளமார்க்கெட் செய்துவந்தான். மந்திரிகள், ஆபீஸர்கள் முதலியவர்களின் கையைக் கடித்து, வேண்டிய பணம் சேர்த்திருந்தான். இந்த யுத்தத்திலும் அவனது லாபம் தனிதான்.

பண்டிட்ஜி ஒரேயடியாகச் சொன்னார் "இது முற்றிலும் உண்மைதான்,பரச்சாராம்! ராகுவும் கேதுவும் மூன்று முறை ஒன்றுசேர்வது மிகவும் பயங்கரமானதுதான்!"

பரச்சாராம் தனது வேஷ்டியின் நுனியிலிருந்து இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றை, பண்டிட்ஜியிடம் கொடுத்துக் கொண்டே கூறினார். "மஹாராஜ், தாங்கள் குழந்தைகளுக்கு மிட்டாய் வாங்கிச் செல்லுங்

கள்',—அவன் கீழே குனிந்து பண்டிட்ஜியின் பாதங்களைத் தொட்டுவிட்டுத் திரும்பினான்.

பண்டிட்ஜி கண நேரம் பரச் சாரம் செல்வதைப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அவரது முகத்தில் வெற்றிப் பெருமிதம் ஒளி வீசிக் கொண்டிருந்தது. தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அடுத்த கணமே மாஸ்டர் லோக் மூல், டீகம் வெற்றிலைக்காரன் முதலியவர்களின் முகங்கள் நினைவுக்கு வந்ததும், அவரது மனம் வாட்டமுற்றது. இன்று அவர் ஓர் பச்சைப் பொய் சொல்லியிருந்தார். திடீரென அவருக்குத் தன் கையிலிருந்த சிவப்பு நிற இரண்டு ரூபாய் நோட்டு, தன்னைப் போன்ற லக்ஷக்கணக்கான ஏழை, ஆதரவற்ற மக்களின் ரத்தத்தில் தோய்ந்த சிவப்புக் காகிதமாகத் தோன்றியது.

அவர் அந் நோட்டை முஷ்டியினால் பலமாக அழுத்தினார். அவரது கால்கள் மெதுவாக வீட்டை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன.

சரஸ்வதி

ஒவ்வொரு ஆங்கில மாதமும்
முதல் தேதியன்று வெளிவருகிறது

சந்தா விவரம்

தனிப்பிரதி 2 அணா
ஆண்டு சந்தா ரூ. 1-8-0.

தனிப்பிரதி வேண்டுவோர் மூன்றணா ஸ்டாம்பு அனுப்பிவைக்கவும்.

நிர்வாகி

சரஸ்வதி
1, ராஜா அண்ணாமலை செட்டியார் ரோடு,
வேப்பேரி :: சென்னை-7.

இளம் எழுத்தாளருக்கு

◆◆

ஆஸ்ட்ராவ்ஸ்கி

◆◆

உங்கள் வாழ்வில் எழுதுவதைத் தொழிலாக நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். இந்த மகா நாட்டிற்கு ஒரு மிகப் பெரிய கேள்வியுடன் நீங்கள் வந்திருக்கிறீர்கள்; ஒருவன் எப்படி எழுதுகிருன்? இதற்கு ஏதோ மிகத் தெளிவான, அதிசயிக்கத் தக்கதோர் பரிகாரம் இருப்பதாக இளைஞர்களுக்குத் தோன்றலாம். ஆனால் எழுதுவதென்பது மிகக் கடினமான ஒரு வேலையென்பதும், அதேசமயத்தில் நிலையானதோர் ஆனந்தத்தை அளிக்கும் வேலையென்பதும், இலக்கிய மேதைகளுக்குத்தான் நன்கு தெரியும்.

என் இளம் தோழர்களே, யாரும் ஒரு எழுத்தாளன் ஆக முடியும் என்பதை உங்களுக்கு நான் கூற முடியும். ஆனால் தளராத முயற்சியும், சளையாத படிப்பும் அதற்குத் தேவை; புதிய அறிவைப் பெருவதற்குத் தணியாத தாகம் வேண்டும்; மனித சமுதாயத்தின் கலாச்சாரத்தினது சிகரத்தைஎட்டிப்பிடிக்கக் குன்ருத ஆர்வம் இருக்க வேண்டும். இதைப் புரிந்து கொள்வது அவசியம் என்றும் நினைவிலிருத்திக் கொள்ளவும் வேண்டும். இது இல்லாமலும் நீங்கள் புத்தகம் எழுதலாம்; அதில் இங்கும் அங்கும் திறமை காணப்படலாம்; எனினும் உண்மையில் ஆழமும், வீச்சும் நிறைந்த படைப்புகளை உங்களால் சிருஷ்டிக்கவே முடியாது.

என் சொந்த அனுபவத்தையே உங்களுக்குக் கூறுகிறேன். பதினைந்து அல்லது பதினறு ஆண்டுகளுக்கு முன்பு, மிகப்பெரிய போராட்டத்தை நான் கண்ணூரக் கண்டேன்; அதில் பங்கும் கொண்டேன். தீரமிக்க வீரர்களின் சாகஸங்களைக் கண்டேன். ஆனல் அன்று கல்வியறிவற்றிருந்த பையனை நான், இன்று விடாத படிப்பின் விளைவாக எழுதியதைப் போன்றதோர் நூலை எழுதியிருக்க முடியுமா? புரட்சிகரமான போராட்டத்தின் தத்துவத்தைப்பற்றிப் பெற்றுள்ள தெளிவும், அன்று நான் பெற்ற அனுபவத்தைப் பொதுமைப் படுத்தி நிர்ணயிக்கும் திறமையும் ஏற்பட்டபின் எழுதியதைப் போன்று அன்று எழுதியிருக்க முடியுமா? இல்லை, முடியவே முடியாது. ஏனெனில் எழுதுவதற்கு, பார்த்து, கூர்ந்து

நோக்கி, உணர்ந்தால்மட்டும் போதாது; படிக்கவும் வேண்டும்; வாழ்க்கையைப் பற்றிய பூர்ண ஞானம் பெறவேண்டும்; உலகக் கலாச்சாரத்தின் உன்னதப் படைப்புகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டும்; உங்கள் கண்ணோட்டம் விரிவு படுத்தப்பட வேண்டும். நடைமுறை அனுபவத்தை மார்க்ஸிஸ லெனினிஸ வெளிச்சத்தில் பரிசீலிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், காகிதத்தின்மீது உங்களின் எழுதுகோலை வைக்கும் காலத்து நீங்கள் கூர்ந்து நோக்கியவற்றைப் பொதுமைப்படுத்தும் பொழுது, நீங்கள் எழுதுவதின் உண்மையான மதிப்பைப் பற்றி உங்களுக்கே நம்பிக்கை ஏற்பட முடியும்.

அதனால்தான், ஒரு எழுத்தாளனின் வாழ்க்கைச் சரிதை மிக முக்கியமானதாக ஆகிறது. ஒரு இளம் எழுத்தாளன், ஒரு மனிதனாக, ஒரு போராட்டக்காரனாக வளர்ந்தால்தான், நாடு முழுவதின் முன்னேற்றத்துக்கொப்ப அடியெடுத்து வைத்தால்தான் அவன் ஒரு எழுத்தாளனாக வளர முடியும். ஒரே நாளில் உங்களால் பக்குவமடைந்த நிலைக்கு சென்றுவிட முடியாது அது சாத்தியமற்ற காரியம்.

சென்ற காலத்தின் மிக விரிந்த கலாச்சாரப் பாரம்பரியத்தை, ஒரேதாவில் எட்டிப்பிடித்து அதில் தேர்ச்சி பெற்றுவிட முடியாது. நம் இளம் தோழர்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும். அவ்விதம் தேர்ச்சியடைவதற்கு தளராத விடா முயற்சியும், பிரம்மாண்டமான, சளைக்காத உழைப்பும் தேவை. ஆனால் அத்தகைய கடுமையான உழைப்பின் போக்கிலேயே, வரக்கூடிய இன்னல்களை நிவர்த்திக்கும் காலத்திலேயே நம் இதய நாடிகளைத் தூண்டிவிடத் தக்க, ஆனந்தத்தை நாம் பெறுவோம்!

நீங்கள் எழுத்தாளர்களாக விரும்புகிறீர்கள். ஆனால் ஒரு எழுத்தாளன் என்பவன் ஒரு போதகன் என்பதை நீங்கள் அறியவேண்டும். ஒருவன் யாருக்குப் போதனை செய்கின்றானோ அவர்களைவிட அவன் அதிகமான விஷயங்களைத் தெரிந்திருக்க வேண்டும்; அவர்களுக்குச் சொல்லக் கூடியவை சில அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். லட்சக் கணக்கிலேயுள்ள நம் வாசகர்கள் விஷயங்களைத் துருவித் துருவிப் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் மிகப்பெரிய அறிவைப் பெற்றுள்ளார்கள். சுவையற்ற, சாதாரணமான நூல்களை அவர்களுக்காக நாம் எழுதினால் நம்மை அவர்கள் மன்னிக்க மாட்டார்கள்.

எனவே எழுத்தாளர்களாகிய நாம், முன்னேற்றத்திற்காக அணி வகுத்துச் செல்லுபவர்களின் முன் வரிசையிலேயே செல்லவேண்டும்; பின் தங்கி நிற்கக்கூடாது. முன்செல்லும் அணிகளுக்குப் பின்னே தங்கி விட்ட எழுத்தாளன், அவனை

விட்டு வெகுதூரம் முன்னேறிச் சென்றுள்ளவர்களுக்குப் போதனை செய்ய எந்த உரிமையும் கிடையாது.

ஒரு எழுத்தாளன், வாழ்க்கையிலிருந்து, போராட்டத்திலிருந்து ஒதுங்கி நிற்க முடியாது. முதலாளித்துவ விஞ்ஞானிகள் சிலரைப் போன்று, தன் ஆராய்ச்சிக் கூடத்தில் அமர்ந்து கொண்டு எழுத்தின் இரசாயன மாறுதலையோ, அங்க சோதனையையோ நடத்திக் கொண்டிருக்க இயலாது. அக்கரையில்லாத வெறும் பார்வையாளனாக அவன் இருக்க முடியாது.

பொங்கியெழும் போர் உணர்ச்சியுடன், அணிகளின் முன் வரிசையிலே அவன் செல்ல வேண்டும்; எவ்வொரு தோல்வியையும் கண்டு உள்ளம் துடிக்க வேண்டும்; ஒவ்வொரு வெற்றியையும் கண்டு இறும்பூதெய்த வேண்டும்; மக்கள் அனைவருடனும் ஓரணி வகுத்துச் செல்ல வேண்டும்; இத்தகைய குணங்களைக் கொண்ட ஒருவன்தான், உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் உண்மையான நூலை உருவாக்க முடியும்; அந்த நூல் ஒரு அறை கூவலாகவும் இருக்க முடியும். நம் இலக்கியம் உண்மையின் இலக்கியமாகும்; மனித சமுதாயத்தின் நிகழ் காலத்தையும், இறந்த காலத்தையும் பற்றிய சோஷலிஸ உண்மையின் இலக்கியமாகும்.

ஒருசில விரல்விட்டு எண்ணக் கூடிய புல்லுருவிகள், உழைப்பாளி மக்களைக் கொடூரமாக ஒடுக்கி வருவதை முதலாளித்துவ எழுத்தாளர்கள் பார்த்திருந்தும், அவர்கள் வாசகர்களிடம் பொய்யையே கூறுமாறு அவர்கள் எப்பொழுதும் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். பகல் முழுதும் மிருகத்தனமான முறையில், கருணையில்லாது உழைப்பாளி மக்களை உழைக்கச் செய்துவிட்டு, மந்தகாசமான மாலை வேளைகளில் தன் பெண்டு பிள்ளைகளுடன் கொஞ்சிக் குலாவும் ஒரு வியாபாரியையோ, ஒரு பாங்க் முதலாளியையே பற்றி அற்புதமான விஷயங்களைச் சொல்வது அவ்வளவு சுலபமில்லைதான். ஆனால் நமக்கு அத்தகைய பொய் தேவையில்லை. நம்பமுடியாத அளவிற்கு நம் வாழ்க்கையானது அழகாகவும் அற்புதமாகவும் இருக்கிறது. சிறப்புமிக்க விஷயங்களையும் கதாபாத்திரங்களையும் அது நமக்கு அளிக்கிறது. ஒரு பெரும்படையாக, அவை திரண்டு வந்து நம்மீது விழுந்து நம் உள்ளத்தை நிரப்புகின்றன. அழகிலும், சக்தியிலும் ஒன்றோடொன்று போட்டி போடுகின்றன. வாழ்க்கையோடு, வேகமும் கொந்தளிப்பும் நிறைந்த, அதன் முன்னேற்றத்தோடு நாம் அடியெடுத்து வைத்துச் செல்வதே கடினமான காரியமாகும். இன்றும்கூட எதிர் காலத்தைச் சேர்ந்த புதிய மக்கள் நம் கண் முன்னே உருவாவதை நாம் காணலாம். உல

கம் இதுவரை காணுத மக்கள் அவர்கள்; கம்யூனிச மக்கள் அவர்கள். இந்த மக்களைத் தான் நம் புத்தகங்களில் நாம் சித்திரிக்கவேண்டும். வாழ்க்கை எவ்வளவு பொருட்செல்வத்தை நமக்கு அளிக்கிறது! எத்தனை விஷயங்களைக் கொடுக்கிறது! ஏதாவது ஒரு பொருளைப்பற்றி சில சமயங்களில் சிலர் "அது பழையது" "அது காலாவதியாகிவிட்டது" என்றெல்லாம் கூறுகிருர்கள். இது தவறு. காலாவதியாகிவிட்ட பொருள் என்று ஒன்றும் கிடையாது. உள்நாட்டு யுத்தத்தை ஒரு பழைய காலாவதியாகிவிட்ட விஷயம் என்று கூறுபவர்களும் இருக்கிருர்கள். இது மிகப் பெரிய தவருகும். இன்னும் பத்தாண்டுகள், ஏன் நூருண்டுகள் கழித்தும்கூட தன் புதுமை மணம் குன்றுமல் அற்புதம் நிறைந்ததாக அது இருக்கத்தான் செய்யும். மீண்டும் புதிதாக, உண்மையான உயிர்த் துடிப்புடன் அதைச் சித்திரிக்கும் திறமைதான் தேவை. ஆனல் இதைச் செய்வதற்கு நாம் தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருக்கவேண்டும்; நம்முடைய அறிவையும் திறமையையும் வளர்ப்பதற்கு அயராது, தளராது உழைத்துக் கொண்டேயிருக்கவேண்டும்.

இளம் எழுத்தாளர்களாகிய நாம் அப்படித்தான் வளரவேண்டும். அப்படி வளர்ந்தால்தான் பெருமைமிக்க நம்முடைய நாட்டின் பெயருக்குகந்த நூல்களை நம்மால் எழுத முடியும்.

[எழுத்தாளர் மகாநாட்டில் காலம் சென்ற, புகழ்பெற்ற ருஷ்ய எழுத்தாளர் ஆஸ்ட்ராவ்ஸ்கி நிகழ்த்திய உரை—டிசம்பர் 6, 1935]

வெட்சியும் கரந்தையும்

★

எஸ். ராமகிருஷ்ணன்

(5)

ஆங்க நூல்களில், கரந்தைத் திணைக்குரிய ஆயர்களைப் பற்றியுள்ள சான்றுகளை மூன்ருவது, நான்காவது கட்டுரைகளில் ஆராய்ந்தோம். அந்த ஆராய்ச்சியிலிருந்து நாம் கீழ்க் கண்ட முடிவுகளுக்கு வருகிறோம் :—

1. கரந்தை ஒழுக்கத்துக்குரிய இடையர்கள், முல்லை நிலத்துச் சிற்றூர்களில், சுயேச்சையான சமூகங்களாக வாழ்ந்தனர்.

2. அவர்கள் கால்நடை வளர்ப்பையே பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். அந்தக் கால்நடைகளை வெட்சித்திணைக்குரிய வேடர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக, அவர்கள் அடிக்கடி போர்செய்யவேண்டியிருந்தது.

3. போர் செய்யமுடியாதவர்கள் நீங்கலாக, ஆண்கள் அனைவருமே போரில் பங்குகொண்டனர். ஆயர் சமூகம், தானே இயங்கக்கூடிய ஆயுதபாணி ஸ்தாபனமாக விளங்கியது. போருக்கென்று தனிப் படை இருந்ததில்லை.

4. ஆயர்குலவீரர்கள், காலில் கழல் அணிந்து, கழுத்தில் கரந்தைமாலைசூடி, வேலும் கையுமாக வீரப் போர் நிகழ்த்திஞர்கள். கொல்லப்பட்ட விரோதியின் வயிற்றைக் கிழித்துக் குடலை எடுத்து மாலையாக அணிந்து கூத்தாடுவார்கள். அவர்கள் யானைப் படையையும் எதிர்த்துநின்று போராடுவர்.

5. ஆயர் சமூகமே முதன் முதலில் வீர வணக்கத்தைக் கண்டது. போரில் இறந்த வீரத் தலைவனுக்குக் கல்நட்டு, நடுநல்லுக்கு மயில்பீலியும் இலைமாலையும் சூட்டியும் நெல்சொரிந்தும் தொழுதார்கள். வீரவணக்கமே அவர்களது சமயமென்று சொல்லலாம். வீரனது நடுகல்லை வணங்கிஞல், வானமும் அருள்புரியுமென்று அவர்கள் நம்பிஞர்கள்.

6. ஆயர்குலப் பெண்கள் போருக்குச் செல்வதில்லை ; எனினும் வீரநெஞ்சம் படைத்தவர்கலாயிருந்தனர். தத்தம் குடும்பத்து ஆண்கள் வீரத்தில் சிறந்தவர்களாய், சமுதாய நன்மைக்காகச் சர்வபரித் தியாகம்

செய்வதையே அவர்கள் விரும்பினார்கள். கணவனையும் சகோதரனையும் இழந்த பெண்மணி, தனது ஒரே மகனாகவுள்ள பையனைக்கூடப் போருக்கு அனுப்பத் தயங்கமாட்டாள். சமூகமும் சீறூர்த் தலைவனை வேந்தனும் பாராட்டிப் புகழும் வீரனாகக் கணவனும் மகனும் விளங்க வேண்டுமென்று ஒவ்வொரு பெண்ணும் விரும்பினாள்.

7. ஆயர்கள், கொடைப்பண்பிலும் சிறந்தவர்களாயிருந்தனர். வீடுதேடி வருவோருக்கு ஆட்டிறைச்சியும் நெய்யும் பாலும் அவரையும் தினையரிசியும் புளிப்பேறிய கள்ளும் வழங்கி இன்புறுவார்கள். ஆயர்குலப் பெண்களும் விருந்தோம்பல் பண்பை விரும்பிப் பாதுகாத்தார்கள்.

8. ஆயர் மக்கள் முள்வேலியால் சூழப்பட்ட ஊர்களில், கழிகள் தடிகளால் அமைந்த குடிசைகளில் வாழ்ந்தனர். அந்தக் குடிசைகளின் கூரை வரகு வைக்கோலால் வேயப்பட்டிருந்தது. குடிசையின் முற்றத்தில் மாடுகள் கட்டப்பட்டிருந்தன.

9. ஆயர்கள் நல்ல உழைப்பாளிகள். ஆண்கள் தடியும் கையுமாகக் கிளம்பி, மாடுகளை ஓட்டிச்சென்று மேய்த்துவருவர். அவர்கள் மரங்களை வெட்டுவதற்குக் கோடாரி உபயோகித்தனர். அவர்கள் உறிகளில் தயிரைச் சுமந்துசென்று விற்றுவருவதும் உண்டு. ஆயர்குலப் பெண்கள் அதிகாலையிலேயே எழுந்திருந்து தயிர் கடைவார்கள். பகலில் வெளியூர் சென்று தயிரும் வெண்ணெயும் கொடுத்துத் தேவைப் பண்டங்களைப் பண்டமாற்றாகப் பெற்றுவருவார்கள். இவ்வாறு ஆண்களும் பெண்களும் வெளியே போயிருக்கும் நேரத்தில், கிழவர்களே வீட்டுக்குக் காவலாயிருந்தனர். அவர்கள் ஆட்டுத்தோல்மீது படுத்து உறங்குவர்.

10. முல்லை நிலத்தில், வரகு தினை, கொள், அவரை ஆகியவை பயிர் செய்யப்பட்டன. எருதுகளை ஏரில் பூட்டி உழுது, இந்தத் தானியங்களை ஆயர்கள் பயிர் செய்தனர். எருதுகளைக் கட்டி வைப்பதற்குத் தனிக் கொட்டில்கள் இருந்தன. இந்த உழவு வேலையை ஆயர்களே செய்தார்களா அல்லது ஆயர்களைச் சார்ந்துநின்ற வேறு குடிகள் இந்தத் தொழிலைச் செய்தார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை (ஒருவேளை, கடம்பர்கள் முல்லை நில உழவர்களா என்பது ஆராயத்தக்கது).

11. இடையர் குலத்து ஆண்களும் பெண்களும் இசையுணர்ச்சி படைத்தவர்களாயிருந்தனர். மாடுகளை ஓட்டிச் செல்லும் இடையர்கள் மூங்கிற் குழலில் பாலைப் பண் வாசித்து இன்புற்றனர்; அல்லது ஒரு வகை யாழில் குறிஞ்சிப் பண்ணை இசைத்துக் குதூகலித்தனர். கணவனை இழந்த இடையர் குலப்பெண் விளரி

என்ற இரங்கற் பண்ணைப்பாடிய குறிப்பும் உள்ளது.

12. ஆயர் பெண்கள், காதில் குழை அணிந்தனர்; கூந்தலுக்கு நறுமணப் பொருளை உபயோகித்தனர். ஆண்கள், இடுப்பில் மட்டும் ஆடை அணிந்தனர். அவர்கள் மலர் மாலைகளைத் தொடுத்து அணிந்தனர்.

13. கொல்லன், துடியன், பாணன், பறையன், கடம்பன் ஆகிய தொழிற்பிரிவினர் குடிகளென்று குறிப்பிடப்படுவதால் குறிப்பிட்ட குடும்பங்கள் வம்சபரம்பரையாகக் குறிப்பிட்ட தொழிலைச் செய்திருக்கவேண்டும். பிற்காலத்தில் சாதிகளாகக் கெட்டி தட்டிய ஏற்பாட்டின் கருவை இதில் காணலாம். இந்தக் குடிகள் ஆயர் குடியைச் சார்ந்து வாழ்ந்தனர். அவர்கள் சமுகத்துக்காக வரையறுக்கப்பட்ட வேலைகளைச் செய்து, சமுதாயத்தின் ஆதரவுடன் வாழ்க்கை நடத்தினர்கள்.

14. ஆயர் சமூகங்கள் தோன்றிய பிறகே, பண்டமாற்றுமுறை உதயமாயிற்று. ஆயர்கள் வேடர் சமூகங்களுடன் பண்டமாற்று செய்ததைப் பற்றிய குறிப்புகள் உண்டு. மருதநில நாகரீகம் தோன்றிய பின், சுயேச்சையான ஆயர் சமூகங்கள் மருதநில மக்களுடனும் பண்டமாற்று செய்துகொண்டனர். கால்நடைகளின் உற்பத்தி பெருகிய நிலையில், கால்நடைகளையே பண்டமாற்று செய்துகொண்டார்களென்றும், அனுமானிக்கலாம்.

சுயேச்சையான ஆயர் சமூகங்களில் கால் நடைகள் சமூகச் சொத்தாக இருந்த நிலைமையைப் பற்றிச் சான்றுகள் கிடைக்கவில்லை. கால்நடைகள் குடும்பங்களுடைய சொத்தாக இருந்த நிலைமையைப் பற்றியே இலக்கியதில் சான்றுகள் உள்ளன. ஆனுல், இந்தக் குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாகவே இருந்தன. தவிர, சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வான செல்வ நிலைமை ஏற்படவில்லை. சுரண்டுவோர்- சுரண்டப்படுவோர் என்ற பிரிவும் முரணும் பகையும் வளரவில்லை. எனவேதான், இந்தச் சமூகங்களில், வரிவசூலித்தும் சட்டம் செய்தும் ஆட்சி நடத்தும் அரசு என்ற பலாத்காரக் கருவி, சுரண்டப்படும் மக்களை அடக்கி, ஆளும் வர்க்கத்தைக்காப்பாற்றும்கருவி, உதயமாகவில்லை. மாருக, ஆயர் சமூகங்களில், அனைவருமே ஆயுதம் தரித்தவர்களாகஇருந்தனர். சமூகத் தலைவன் "வேந்தன்" என்று குறிப்பிடப்படுகிருனென்பது உண்மை ஆனுல் அந்தச் சீறூர் மன்னர்களை, நாகரீக அரசாங்கத் தலைவருடன் சேர்த்துக் குழப்பக்கூடாது.

15. சுயேச்சையான முல்லை நிலச் சமூகங்களில், அந்தணர் என்ற பிரிவு ஏற்படவில்லை; பண்டமாற்றை உற்பத்தியாளர்களேகவனித்துக்கொண்டதால், வணிகர்கள் என்ற பிரிவும் ஏற்

படவில்லை. எல்லோரும் ஆயுத மேந்தியதால், க்ஷத்திரியர் என்ற பிரிவும் ஏற்படவில்லை.

16. ஊர் மக்கள் கூடும் இடத்தைப் பொது இல் அல்லது மன்றம் என்று அழைப்பர். மரத்தடியில் அமைந்த அந்த இடத்தில், ஊர் மக்கள் கூடிச் சமுதாயப் பிரச்னைகளைப் பற்றிப் பேசி முடிவு செய்வார்கள். சமூக நடவடிக்கைகளின் நடுமையமாக விளங்கியது இந்த மன்றம். கணவனை இழந்த பெண், மன்றத்துக்குச் செல்ல மாட்டாளென்று (புறம் 373) ஒரு குறிப்பு இருப்பதால், பெண்களும் வாடிக்கையாக மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்வரென்று ஊகிக்கலாம்.

17. சீறூர்களில் வாழ்ந்த ஆயர் சமூகங்கள், பெருநில வேந்தர்களுடனும் போராட வேண்டியிருந்தது. அவை தத்தம் சுதந்திரத்துக்காக உறுதியாகப் போராடியதைப் பற்றிய குறிப்புக்களை முன்பே எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஆனால் இறுதியில், பெருநில வேந்தர்களே வென்றனர். இவ்வாறாக, சுதந்திரமான முல்லைநில ஊர்கள், நாகரீக அரசுகளின் பகுதிகளாயின.

வேட்சித்திணைக்குப் பாதீடு என்று ஒரு துறை இருப்பதைக் கண்டோம். வேடர்கள், தாம் கவர்ந்துவந்த கால்நடைகளை நடுவூர் மன்றத்தில் நிறுத்திப் பங்குபோட்டுக் கொள்வதையே அந்தத் துறை குறிக்கிறது. கரந்தைத் திணைக்குப் பாதீடு என்ற துறைகிடையாது. புறப்பொருள் வெண்பா மாலையோ, தொல்காப்பியமோ, பாதீடு என்ற துறை கரந்தைக்கு உண்டென்று குறிப்பிட வில்லை. ஆனால், கரந்தை (ஆநிரை மீட்டல்) என்பது வெட்சியின் இன்னொருவகையே என்று நச்சினார்க்கினியர் கூறுவார். எனவே, தொல்காப்பியத்தின் வெட்சி இலக்கணம் முழுமையும் கரந்தைக்கும் பொருந்துமென்பார். பாதீடு, கரந்தைக்கும் உண்டென்று சொல்லி, அவர் ஒரு செய்யுளைப் 'பெரும் பொருள் விளக்கம்' என்பதிலிருந்து மேற்கோள் கொடுத்திருக்கிறார்.

உண்மையில், கரந்தையாரின் ஒழுக்கத்தில் பாதீடு உண்டு என்பதற்கு எத்தகைய இலக்கியச் சான்றும் கிடையாது. நச்சினார்க்கினியர் தந்திருக்கும் செய்யுளும் பாதீட்டை நிரூபிக்கவில்லை. அந்தச் செய்யுள் இதுவே :—

''யாமே பகுத்திடல் வேண்டா-இனநிரை
தாமே தமரை யறிந்தனகொல்—ஏமுற
அன்றீன்ற தம்மை யறிந்துகொள்
கன்றேய்ப்பச்
சென்றீண்டும் ஆங்கவர் பாற்சேர்ந்து!

[இனநிரை : பசுக்கள். தமரை : தம்முடையவரை (புறத்திரட்டு-770). ஏமுற : பாதுகாப்பாக.]

கன்று தன்தாயைத் தானே கண்டு கொண்டுவிடும். அதைப் போல, இந்தக் கால்நடைகளும்

தத்தம் வீட்டைத் தாமே தேடி அடைந்துவிடும். எனவே, நாம் பகிர்ந்து கொடுக்கத் தேவையில்லை' என்பதே இந்தப் பாட்டின் பொருள். எனவே, இது பாதீடு என்ற துறைக்குரிய செய்யுளாக முடியாது. ஆயர்கள் தமது பசுக்களை வெட்சியாரிடமிருந்து மீட்டுக் கொண்டுவந்து மன்றத்தில் நிறுத்தி யுள்ளனர். அவை இயல்பாகவே எந்தெந்தக் குடும்பத்துக்கு உரியனவோ, அந்தந்தக் குடும்பத்தைத்தாமே அடைந்துவிடும். எனவே, பிரித்துக் கொடுக்கும் வேலை இல்லையென்று சமூகத் தலைவன் கூறுகிறான். இதிலிருந்து, கரந்தை ஒழுக்கத்தில் பாதீடு இல்லையென்பதே தெளிவாகிறது. மேலும், கால் நடைகள் சமுதாயத்தின் பொதுச் சொத்தாகவிருக்கவில்லை யென்றும், குடும்பங்களின் உடைமையாயிருந்தன வென்றும் கூட நாம் அறிந்துகொள்ளலாம்.

அதைப் போலவே, கொற்றவை வணக்கத்தையும் கரந்தை, வெட்சி என்ற இருதிணைகளுக்கும் நச்சினார்க்கினியர் பொதுவாக்குவார். ஆனால் ஆயர்கள், கொற்றவையை வணங்கினார்களென்பதற்குச் சான்று இல்லை.

இன்னொரு உண்மையும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. வெட்சித்திணைக் குரிய வேடர் சமூகங்கள், 'பகுத்துண்ணல்' என்ற பண்பை உடையவர்களென்பதற்கு முன்பே சான்றுகள் தந்தோம். நடுவூர் மன்றத்தில் அவர்கள் கூட்டாக உண்பர் என்றும், ஆயர்களிடம் அபகரித்த எருதுகளையும், வேட்டையில் கிடைத்த பிராணிகளையும் சமைத்துக் கூறு போட்டுப் புசிப்பர் என்றும் எடுத்துக் காட்டினோம். இந்த முறை ஆயர் சமூகங்களில் இருந்தமைக்குச் சான்று இல்லை.

வெட்சியும் கரந்தையும் பூர்வீகத் தமிழர்களின் ஒழுக்க வகைகள் என்பதையே இலக்கியச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. ஆநிரைகளைக் கவர்ந்து செல்லும் வெட்சித் திணை, சுயேச்சையான வேடர் சமூகங்களுக்கு உரியது; ஆநிரை மீட்டல், சுயேச்சையான ஆயர் சமூகங்களின் ஒழுக்கம்.

ஆநிரைகளைக் கவர்வதென்பது பூர்வீகத் தமிழர்களின் ஒழுக்கமாக மட்டும் இருந்ததில்லை. ஆரியர்கள், கணங்களிலும் குலங்களிலும் பூர்வீகப் பொதுவுடைமை முறையில் வாழ்ந்தபொழுது, அவர்கள் மத்தியிலும் இந்த ஒழுக்கம் நிலவியது. கணபதியின் தலைமையில், அடுத்த கணத்துடன் போராடி, அதன் கால்நடைகளைக் கவர்ந்து கொண்டு வந்து பங்குபோட்டுக் கொள்ளும்முறை இந்தியாவுக்கு வந்த பூர்வீக ஆரியர்கள் மத்தியில் நிலவியதை வேதநூல்களிலிருந்து அறியலாம். [இதைப் பற்றிப் "பண்டைக்கால இந்தியா" என்ற நூலில் ஆறாவது அத்தியாயத்தில் காண்க] ஐரோப்பாவிலும் பூர்வீகச் சமூகங்கள், கால்

நடைகளைக் கவரும் ஒழுக்கத்தை உடையவர்களா யிருந்ததைப் பற்றிப் பல சான்றுகள் உள் ளன. பூர்வீகச் சமுதாய அமைப் பின் இயல்பான அம்சமாக இது இருந்த தென்பதை உணர வேண்டும்.

இரு பெரு வேந்தர் போர் புரிய முடிவு செய்யும்பொழுது, ஒருவர் மற்றவர் நாட்டில் வாழும் பசுக்களையும் அந்தணர் கள் முதலியோரையும் பாதுகாப் பான இடம் தேடிக்கொள்ளும் படி பறையறைந்து அறிவிப்ப ரென்றும், அதுவே தர்ம யுத்த மென்றும், பசுக்கள் பறையறை வதை உணர முடியாததால், அவற்றைக் கைப்பற்றிப் பாது காக்கும்படி வேந்தன் தன் வீரர் களை ஏவுவான் என்றும் அவ் வாறு ஏவப்பட்ட வீரர்கள் எதிரி நாட்டுப் பசுக்களைக் கவர்வதே வெட்சித் திணையென்றும் பல ரால் கூறப்படும். அவ்வாறு கவரப்பட்ட பசுக்களை எதிரி நாட்டு வேந்தன் தன் வீரர்களை ஏவி மீட்பதே கரந்தையென் றும் அவர்களால் கூறப்படும். வெட்சி, கரந்தை ஆகிய திணை களைப் பற்றியுள்ள சம்பிரதாய மான வியாக்கியானம் இதுவே.

ஆனல் இது கொள்ளத் தக்க விளக்கம் அல்ல; தள்ளவேண் டிய வியாக்கியானமே. வெட்சி யும் கரந்தையும் சீறூர்ச் சமூகங் களின் ஒழுக்கங்க ளென்பதை இலக்கியச் சான்றுகள் அனைத் தும் ஒருமுகமாக மெய்ப்பிக்கின் றன. தவிர, வெட்சியார் தாம் கவர்ந்து வந்த பசுக்களைப் பாது காப்பதாகக் கூறுவதற்கு இடமே யில்லை. அந்தப் பசுக்களை அவர் கள் பங்குபோட்டுக் கொண்டன ரென்றே வெட்சித் திணையின் இலக்கணமும், இலக்கியச் சான் றுகளும் எடுத்துரைக்கின்றன, பெரு வேந்தர்களுக்கிடையே நிகழ்ந்த போர்களுக்கும் வெட்சி கரந்தைத் திணைகளுக்கும் தொடர்பு காண்பது பொருந்தா தென்பதை, இந்தத் தொடர் நிலைக் கட்டுரையைப் படித்தவர் கள் தெளிவாகக் காண முடியும்.

நமக்கு ஒழுக்கத்தைப் பற்றிச் சில கருத்துக்கள் ஏற்பட்டிருக் கின்றன. இந்தக் கருத்தோட் டத்துடன், சரித்திரத்தை ஆராய முயற்சிக்கிறோம். உதாரணமாக, ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழும் இல்லறத்தையே நாம் விரும்புகிறோம். எனவே, பூர் வீகச் சமுதாயங்களில், கோஷ் டித் திருமணமுறை இருந்த தென்றும், அதிலிருந்தே தாய் வழிச் சமூகம் என்பது ஏற்பட்ட தென்றும் சொன்னல், பலருக் குக் கோபம் வருகிறது. அதைப் போலவே, ஒரு நாடு இன்னொரு நாட்டின்மீது படையெடுத்துப் போர் புரிந்து ஆதிக்கக் கொடி கட்டிப் பறக்கவிடும் அக்கிர மத்தை ஆதரிப்பவர்கள்கூட அடுத்த கிராமத்திலுள்ள கால் நடைகளைக் கவர்ந்துவருவதைத் தீய ஒழுக்கமென்று கூறுவர். எனவே, பூர்வீக மக்கள் சிறு சிறு சமூகங்களில் வாழ்ந்த பொழுது, ஆநிரைகளைக் கவரும் ஒழுக்கத்தைக் கொண்டிருந்தன

ரென்று சொன்னால், அத்தகைய ஆராய்ச்சியாளருக்குக் கோபம் வருகிறது. எனவே, அவர்கள் உண்மையைத் தமது பார்வைக்குத் தக்கபடி திரித்துவிடுகிறார்கள். அல்லது, ஆநிரையைக் கவர்தல் தீயொழுக்கமென்று அவர்கள் எண்ணுவதால், அது பற்றிச் சான்றுகள் இருந்தாலும், அம்மாதிரி நிகழ்ந்திருக்க முடியாதென்று தாமே முடிவு செய்துகொண்டு, அந்தச் சான்றுகளை வேறு வகையில் புரிந்துகொள்ள நல்லெண்ணத்துடன் முயற்சிக்கிறார்கள்.

இவ்வாறுதான், நமது நாட்டுச் சான்றோர் பலர் இடைக் காலத்தில் முயற்சித்தனர். தமிழ் வேந்தர்கள் போர் புரியும் பொழுது பசுவதை நிகழக்கூடாதென்ற கருத்தில், மாற்றான் நாட்டுப் பசுக்களைக் கவர்ந்து காப்பாற்றியதை வெட்சித்திணை விளக்குவதாக அவர்கள் வலிந்து பொருள் கொண்டனர். ஆனால், அவர்களது நல்லெண்ணமும் நேர்மையும் தவறைச் சரி செய்துவிட முடியாது. அறமும் ஒழுக்கமும் எல்லாக் காலத்துக்கும் ஒருசீராக அமைவதில்லை. அவை அந்தந்தக் காலத்துச் சமுதாய நிலைமைகளால் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே, நாம் இப்பொழுது ஒழுக்கமாகக் கருதுவதைப் பூர்வீகச் சமூகத்தில் காணவில்லையானால், அதற்காகப் பூர்வீக மக்களின் வரலாற்றைத் தெரிந்தோ தெரியாமலோ திரித்துப் புரட்டுவதில் அர்த்தமில்லை.

மனிதனை மனிதன் அடிமைப்படுத்தி வைத்திருப்பதை அடிமைச் சமுதாயம் நல்லொழுக்கமாகக் கருதியது. இன்று நாம் அதைத் தீய ஒழுக்கமாகக் கருதுகிறோம். இன்று, ஜனநாயக மக்கள், நிலப்பிரபுத்துவச் சுரண்டலைத் தீய ஒழுக்கமாகக் கருதுவர்; ஆனால், நிலப்பிரபுக்களோ அதை நல்லொழுக்கமாக எண்ணுவர். கூலி உழைப்பு மூலம் மனிதனை மனிதன் சுரண்டும் முறை முதலாளித்துவ முறை. இந்தச் சமுதாயத்தில் ஆதிக்கம் வகிக்கும் வர்க்கத்தின் ஒழுக்க நியதிகள் அந்த முறையை ஆதரிக்கின்றன. ஆனால் சோஷலிஸ்ட் சமுதாயத்தில், மனிதனை மனிதன் சுரண்டும் முறை மாபாதகக் குற்றமாகக் கருதப்படும். இவ்வாறு, ஒழுக்கமும் அறமும் சமுதாய நிலைமைகளால் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே, நமக்கு நல்லொழுக்கத்தைப்பற்றியுள்ள கண்ணோட்டத்துக்கு உகந்ததாகப் பூர்வீக மக்களின் வரலாறு அமைந்திருக்க வேண்டுமென்று எண்ணுவது தவறாகும்.

வெட்சித் திணை பூர்வீகத் தமிழர்களின் அறம். எல்லாப் பூர்வீகப் பொதுவுடைமைச் சமூகங்களிலும் இதே மாதிரியான அறம் நிலவியது. எனவே இதைச் சொல்வதற்கு நாம் வெட்கப்படத் தேவையில்லை. மறுபுறத்தில், தமிழன் தோன்றியபொழுதே, நாம் தற்சமயம் கருதும் நல்லொழுக்கத்தைப் பெற்றிருந்தானென்று கூறி,

தமிழனுக்கு அலாதியான உயர்வு உண்டென்று உரிமை கொண்டாடும் "இனவெறி"ப் போக்கும் தேவையில்லை. பொருளுற்பத்தி நிலைமைகளின் மாறுதல்களுக்குத் தக்கபடி, சமுதாய அமைப்புகள் மாறுகின்றன. பொருளுற்பத்தி நிலைமைகள் பிற்பட்டிருந்த புராதனக் காலத்தில், மக்கள் பொதுவுடைமைச் சமூகங்களில் வாழ்ந்தனர்; வறுமையையும் அநித்திய வாழ்வையும் பகிர்ந்துகொண்டனர். அந்தச் சமூகங்கள் ஒன்றோடொன்று போர் புரிவதும், செல்வங்களைக் கவர்ந்து பங்கிட்டுக் கொள்வதும் சகஜமாயிருந்தது.

ஆதியில், மக்கள் வேடர்களாயிருந்தனர். வேடர்கள்தான் முழுவதும் வேட்டையாடிக் கிடைத்த பிராணிகளுடன் திரும்புவார்கள். அவற்றைப் புசித்து வாழ்வார்கள். சில சமயங்களில் அவர்கள் குட்டிகளையும் கன்றுகளையும்கூட உயிரோடு பிடித்துக்கொண்டு வந்தனர். அவற்றை அவர்கள் உடனடியாகக் கொல்லவில்லை; அதற்கு மாறாக அவற்றுக்கு உணவு கொடுத்து வளர்த்தனர். அந்த நான்கு கால் கைதிகள் வளர்ந்தபின், வேட்டை கிடைக்காத நாட்களில் உணவுக்குப் பயன்படுமல்லவா? இவ்வாறு, இறைச்சிக்காகவும் தோலுக்காகவும் கால்நடைகளைப் பாதுகாத்துப் பராமரிக்கும் பழக்கம் தோன்றியது. அப்பொழுது, கால்நடை வளர்ப்பின் அனுகூலங்களை அவர்கள் நன்கு உணரவில்லை. ஆடு அல்லது பசுவைக் கொல்லாமல் வளர்த்தால் அதிகப் பயனுண்டு என்பதை அவ் வேடர்கள் புரிந்துகொள்ளவில்லை. ஒரு பசுவை ஒரு தடவைதான் புசிக்கலாம். ஆனால் அந்தப் பசுவின் பாலைப் பல ஆண்டுகள் குடிக்கலாம். மேலும், ஒரு பசு வருஷத்துக்கு ஒரு கன்று ஈன்று இறுதியில் அதிகமான இறைச்சி கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆடு விஷயத்திலும் அதே நிலைமைதான். ஆட்டைக் கொன்றால், தோலும் இறைச்சியும் கிடைக்கின்றன. அதற்கு மாறாக, ஆட்டை வளர்த்தால், அது பல குட்டிகளை ஈன்று உதவுகிறது. ஆட்டு ரோமத்தை வெட்டிக்கொண்டால், மீண்டும் ரோமம் வளர்கிறது. ஆக, நான்கு கால் கைதிகளைக் கொல்வதற்குப் பதிலாக அவற்றைப் பாதுகாத்து வளர்ப்பதே சிறந்தது. ஆனால் இதை மக்கள் உடனடியாக உணரவில்லை. வேடன் இடையனாக மாறுவதற்குப் பல்லாண்டுகளாயிற்று.

முதலில், மக்கள் இயற்கையாக விளைந்த தானியத்தை (புல்லரிசி போன்றவற்றை) சேகரிப்பவர்களாகவே இருந்தனர். அதன்பின், அந்தத் தானியத்தை பூமியில் ஒளித்து வைப்பதின் மூலம், அதிகமான தான்யம் பெற முடியுமென்பதைக் கண்டனர்.

இவ்வாறாக, முல்லை நிலத்தில் ஆயர் சமூகங்கள் உருப்பெற்

றன. வேடர்களின் வாழ்வு நிச்சயமற்றதாயிருந்தது. அவர்களுக்கு வேட்டை கிடைக்கலாம், கிடைக்காமலிருக்கலாம். அவர்களுக்கு தானியச் சேகரிப்பில் பலன் கிட்டலாம், கிட்டாமலிருக்கலாம். ஆனால் மனிதன் இயற்கைக்கு உதவி செய்யக் கற்றுக்கொண்டுவிட்டதை ஆயர் வாழ்வில் பார்க்கிறோம். அவர்கள் ஆடுமாடுகளை வளர்த்தனர். முல்லை நிலத்தில் வரகுபோன்ற தானியங்களைச் சாகுபடி செய்தனர். காட்டை அழித்து நிலத்தைப் பண்படுத்தி, மேய்ச்சல் பூமியையும் சாகுபடி நிலத்தையும் உத்திரவாதம் செய்வதற்கு, அவர்கள் எவ்வளவோ வேலை செய்யவேண்டியிருந்தது! ஆயிரக்கணக்கான இடையூறுகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது! புதிய வேலையில், இன்பத்துடன் துன்பமும் காத்திருந்தது. கதிரவன் வெப்பத்தால், முல்லை நிலம் நிலைதிரிந்து பாலையாகிவிடும். பயிர் அழிந்து புல்வெளி கருகி மனிதனுக்கும் ஆடுமாடுகளுக்கும் ஆபத்து நேரிடும். அல்லது வெள்ளத்தினால் ஆபத்துகள் உண்டாகும். அல்லது வேறு ஒரு சமூகத்தின் படையெடுப்பால் அனைத்தையும் இழந்துவிடக்கூடிய நிலையும் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையில் மனிதன் தெய்வங்களைப் படைத்துத் தொழுவதும், மூட நம்பிக்கைகளைக் கொள்வதும் இயல்பே.

இந்தச் சமுதாய வளர்ச்சிச் சித்திரத்தையே வெட்சி, கரந்தை பற்றிய இலக்கணமும் இலக்கியச் சான்றுகளும் நமக்கு அளிக்கின்றன. ஆநிரைகளைக் கவர்வதற்காகவும் மீட்பதற்காகவும் வேடர்களுக்கும் ஆயர்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தைப் பற்றிமட்டுமல்ல, இந்த இருவகைச் சமூகங்களின் வாழ்வைப் பற்றியுமே ஒருவாறு உணர்வதற்கு, பண்டைத் தமிழ் நூல்கள் பேருதவி செய்கின்றன. இந்தத் தொடர்நிலைக் கட்டுரையில் அதைச் சுருங்கிய முறையில் சுட்டிக்காட்டி யிருக்கிறோம்.

(முற்றும்)

குட்டிக்கதைகள்

பொய்க்குப் பரிசு!

நத்தை மாதிரி மெதுவாக தரை மீது ஊர்ந்து செல்வதில் ஆமை சலிப்புக் கொண்டது. ஆகாயத்தில் பறக்க ஆசைப் பட்டது. "எந்தப் பறவை யாவது என்னை ஆகாயத்திற் குத் தூக்கிக்கொண்டு போய்க் காட்சிகளைக் காட்டட்டும்; பதி லாக நான் பூமிக்குள் இருக்கும் புதையல்களைக் காட்டுகிறேன்" என்று சொல்லி வந்தது. இதைக் கேட்ட ஒரு கழுகுக்கு புதையலில் ஆசை பிறந்தது. ஆமையை ஆகாயத்தில் சுமந்து போய் காட்சிகளைக் காட்டியது. ஆனால் ஆமை, தனது வாக்குறு தியை நிறைவேற்ற முடிய வில்லை.

கோபம்கொண்ட கழுகு மீண் டும் ஆமையை ஆகாயத்திற்குத் தூக்கிப்போனது. மேலிருந்த படியே ஒரு பாறைமீது 'தொப்' பென்று போட்டது. கீழே விழுந்த ஆமை நசுங்கிச் செத் தது.

❋

சேரிடம் அறிந்துசேர்!

ஒரு மண் குடமும், ஒரு பித்தளை குடமும் ஆற்று வெள்ளத் தில் மிதந்து போய்க் கொண்டிருந்தன. மண் குடத்தைப் பித் தளைக் குடம் எப்பொழுதுமே மதித்த தில்லை. துச்சமாகவே கருதி வந்தது. இப்பொழுது இரண்டும் ஆபத்தில் இருந்தன.

பித்தளைக் குடம் மண்குடத் திடம், "தம்பி! நம் இருவருக் கும் ஒரேகதி ஏற்பட்டிருக்கிறது. இப்போதாவது இருவரும் ஒன்று சேர்ந்து போவோம்" என்று சொல்லியது.

இதைக்கேட்ட மண் குடம் பதறிவிட்டது. "ஐயய்யோ! வேண்டாம்! கிட்டத்திலேயே வராதே, விலகியே இரு. நீ என் மீது மோதினாலும் சரி, அல்லது நான் உன்மீது மோதினாலும் சரி என் கதி அதோகதிதான். நம் இருவருக்குள்ளும் ஒற்றுமை ஏற்பட முடியாதப்பா!" என்று கூறி ஒதுங்கிப் போனது.

❋

வீண் பெருமை!

கழுதையும், சேவலும் மேய்ந்து கொண்டிருந்தன. அங்கே ஒரு சிங்கம் வந்தது. சிங்கத் தைக் கண்டு பயந்த சேவல் தன் பலம் கொண்ட மட்டும் கொக் கரித்தது. அந்த சிங்கத்திற்கு கோழியின் கொக்கரிப்பு மட்டும் பிடிக்காது. எனவே, அந்த இடத்தை விட்டே எடுத்தது ஓட்டம். சிங்கம் ஓடுவதைக்

ஈசாப்

கண்ட கழுதை, தன்னைக் கண்டே அது பயந்து ஓடுவதாக நினைத்தது. அதனால் சிங்கத்தைத் துரத்திக்கொண்டே போயிற்று சேவலின் கொக்கரிப்பு காதுக்குக் கேட்காத தூரத்துக்குப் போனதும் சிங்கம் நின்று திரும்பிப் பார்த்தது. அதன்மேல் பாய்ந்து சின்னாபின்னமாக்கியது.

❋

யோசித்துச் செய்!

ஒரு மனிதனை நாய் ஒன்று கடித்துவிட்டது. கடித்த இடத்தை ஒரு ரொட்டித் துண்டால் துடைத்து, அந்தத் துண்டை, கடித்த நாய்க்குப் போடும்படி ஒரு கிழவி யோசனை சொன்னாள். கடி பட்ட மனிதன் கிழவியின் சொல்படி செய்துகொண்டிருந்தபோது அவ்வழியே ஒரு அறிஞர் போனார். 'விஷயம் என்ன ?' என்று கேட்டார்.

அந்த மனிதன் நடந்த விஷயத்தைச் சொன்னான். அதைக் கேட்ட அந்தப் பெரியவர், 'நல்ல வேலை, நீ இதை மறைவாகச் செய்துகொண்டிருக்கிறாய். மற்ற நாய்களுக்குத் தெரியும்படி பகிரங்கமாகச் செய்துகொண்டிருந்தால் அவை நம் ஒருவரையும் பாக்கிவிடாமல் உயிருடனே தின்றுவிடும்" என்று பதிலளித்தார்.

❋

பழம் பெருச்சாளிகள்

ஒரு வீட்டில் எலி உபத்திரவம் பொறுக்க முடியாமல் இருந்தது. அதனால் வீட்டுக்காரர் ஒரு பூனையை வாங்கி வந்து வளர்த்தார் எலி வேட்டையில் அந்தப் பூனை பலே பூனையாக இருந்தது. தங்கள் கூட்டமே நாசமாகி வருவதைக் கண்ட எலிகள் விட்டங்களில் போய் வசிக்க ஆரம்பித்தன. கீழே வருவதே இல்லை. பூனையால் போக முடியவில்லை. இதனால் பூனைக்கு வேட்டை அகப்படாமல் பட்டினி கிடக்க நேர்ந்தது, எவ்வளவு நாட்கள் தான் பட்டினி கிடக்க முடியும். எலிகளை ஏமாற்ற அது ஒரு யுக்தி செய்தது. சுவரில் இருந்த கட்டை ஒன்றில் பின்னங் கால்களால் தொங்கியது; கண்களை மூடிச் செத்தது போலப் பாசாங்கு செய்தது. ஆனால், எலிகள் திடீரென்று அந்தப் பக்கம் வரவில்லை. ஒரு கிழட்டு எலியைப் போய்ப் பார்த்து வரும்படி அனுப்பின. அந்தக் கிழட்டு எலி விட்டத்தின் ஓரத்துக்கு வந்து பூனையை நன்றாகப் பார்த்தது. பூனையின் பாசாங்கை அது கண்டுகொண்டது. உடனே பூனையைப் பார்த்து, "பூனையாரே பலே பேஷ்! உமது பக்கத்தில் மட்டும் நாங்கள் வந்துவிடுவோம் என்று நினைத்துவிட வேண்டாம். உண்மையாகவே நீர் செத்துப்போய் உமது தோலுக்குள் வைக்கோலை வைத்து அடைத்திருந்தாலும் கூட நாங்கள் உம் பக்கமே வர மாட்டோம்" என்று சொல்லி அந்தக் கிழட்டு எலி சிரித்தது!

❋

ஈயும் எறும்பும்

ஒரு ஈயும் எறும்பும் ஒருநாள் தங்கள் பெருமைகளைப்பற்றி வாதம் செய்தன.

ஈ சொன்னது: ஊர்ந்து செல்லும் அற்பப் பூச்சியாகிய உனக்கு என்னோடு ஒப்பிட்டுப் பேச என்ன யோக்கியதை இருக்கிறது? நான் ஊர்வதில்லை. பறவையைப்போலப் பறக்கிறேன். அரண்மனைக்குள் தாராளமாய்ப் போகிறேன். ராஜாக்கள், சக்ரவர்த்திகளின் முடிகள்மீது உட்காருகிறேன். அழகிய ராணிகளின் தாமரை முகங்களில் உட்காருகிறேன். அது மட்டுமா? கோயிலின் மூலஸ்தானங்களுக்கே போகிறேன். அங்கே நான் ருசி பார்க்காத நெய்வேத்தியங்களே கிடையாது. எப்பேர்ப்பட்ட விருந்தானாலும் சரி, நான் போய் ருசி பார்க்கிறேன். உயர்ந்த சாப்பாடுகளையும் பானங்களையும் நான் அருந்துகிறேன். உன்னைப்போல ஒன்றிரண்டு பருக்கைகளைக் கொண்டு பல நாட்களைத் தள்ளுகிற வழக்கம் எனக்கில்லை.

இதற்குப் பதிலாக எறும்பு சொல்லியது: ரொம்ப அழகுதான்! நான் சொல்லுகிறேன் கேள். உன் விருந்தாளிகளைப் பற்றிப் பிரமாதமாகப் பேசுகிறாய். ஆனால் உனக்குச் சாப்பாடு எது என்பது உன் இஷ்டத்தைப் பொறுத்ததல்ல. சில சமயம் நீ சாப்பிடும் சாப்பாடு இருக்கிறதே? அப்பப்பா, நான் யார் கொடுத்தாலும் ஜென்மத்தில் அதைத் தொடக்கூட மாட்டேன். என்னமோ ராஜாக்கள் தலைகளில் போய் இருப்பதாகச் சொல்லுகிறாய். ராஜாக்கள் மீது இருந்தாலும் சரி, கழுதைகளின் மேல் இருந்தாலும் சரி, நீ போய் இருந்த உடனேயே வெறுப்பு கொண்டு அவர்கள் உன்னை விரட்டுகிறார்கள். உனக்குக் கிடைக்கும் வரவேற்பை என்ன என்று சொல்லுவேன்? மழைக் காலங்களில்கூட என் உழைப்பால் சேகரித்தவைகளை சாப்பிட்டுக்கொண்டு நான் சவுக்கியமாக இருக்கிறேன். ஆனால் நீயோ? உன் கூட்டங்கள் மழைக்காலங்களில் குளிராலும் பட்டினியாலும் சாகிறார்கள். சரி, உன்னுடன் பேசி என் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. பேசுவதால் வாயோ, வயிறோ நிரம்பப் போவதில்லை!